தமிழ் வாழ்க.

துணர் சக. மலர் உ, ந, ச.

MADRAS

தமிழ்ப் பொழில்

விசுவாவசு — வைகாசி, ஆனி, ஆடி.

1965

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

உள்ளுறை.

துணர் சக. ●○○○● மலர் உ, ந, ச.

பக்கம்

1. பொழிற்றொண்டர் பேசுகின்றார் 33
2. சேரன் செங்குட்டுவன்
புலவர், ச. பாலசுந்தரம் 35
3. துறவி
கு. சிவமணி 41
4. தமிழனே தலைமகன்
சாலை இளந்திரையன் 54
5 "வேள் எவ்வி" (நாடகம்)
புலவர், ச. பாலசுந்தரம் 59
6. குறள் மரபு
புலவர், தி. நா. அறிவுஒளி 64
7. பண்டைத் தமிழரின் கட்டிடக்கலை
T. V. சிவசண்முகம் பி. ஏ.. 65
8. புகார் முதல் வஞ்சி வரை
பேராசிரியர், சி. கோவிந்தராசனார் 69
9. இலக்கண தீபம்
வே. நடராசன் 81
10. வள்ளுவத்தில் ஆராய்ச்சிப் பொழிவுகள்
சாலை இளந்திரையன் 89
11. கையறு நிலை
புலவர், ச. பாலசுந்தரம் 92
12. ஞாயிறு மாட்சி
தி. வேங்கடராமன், பி. ஏ., பி. டி., 93
13. அறத்தின் தீர்ப்பு
புலவர், தி. நா. அறிவுஒளி 97
14. வஞ்சினம் வாய்த்த வேந்தன்
பேராசிரியர், K. S. மகாதேவன் M. A. B. SC., 100
15 புலவர் மாலை
சித்தாந்தச்செல்வர், அ. தா. ப. திருஞானசம்பந்தன் 109
16. மனமும் இனமும்
புலவர், கு. கணபதி 111
17. ஒளி
சித்தாந்தச்செல்வர், அ. தா. ப. திருஞானசம்பந்தன் 113
18. தமிழுள்ளம்
ஈரோடு, ஆற்றலரசு 120
19. கொல்லிப் பாவை
புலவர், தே. ப. சின்னசாமி 121
20. பசிப்பிணி
கோ. கோவிந்தசாமி, திருமுக்கூடல் 124
21. சிலப்பதிகாரம் காவியமா?
சாலை இளந்திரையன் 127

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௬	மலர்
	விசுவாவசு, வைகாசி.	
௪௧	1965 ஏப்ரல், மே.	௨.

பொழிற்றொண்டர் பேசுகின்றார்......

தமிழ் நலம் பேணுந் தகைமையீர்!

வணக்கம். நம் தமிழ்ப் பொழிலில் திங்கள் தோறும் மலரும் மலர்களிற்சில எதிர்பாராத பல காரணங்களால் உரியகாலத்தில் மலராமற் போயினமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.

விசுவாவசு-சித்திரை மலர் சென்ற திங்கள் வெளியாயிற்று: அதன் தொடர்ச்சியாக இத் திங்களிதழ், வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மும் மலர்களைக்கொண்ட முத்திங்களிதழாக மலர்கின்றது. அடுத்த திங்களில் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி ஆகிய மும்மலர்களைக்கொண்ட முத்திங்களிதழ் வெளிவரும். அதன்பின்னர் இடையறுத நிலையில் திங்கள்தோறும் மலர்கள் மலர்ந்து மணம்பரப்பும்.

தொண்டு தமிழ் முன்னேற்றத்தைக் கடமையாக்கொண்டொளிரும் நம்சங்கத்திலிருந்து வெளிவரும் தமிழ்ப் பொழில் எவ்வளவோ இடையூறுகளுக்கிடையே நாற்பதாண்டுகளைக் கடந்து நாற்பத்தோராமாண்டின் நடுப்பகுதியில் இயங்கிக் கொண்டுள்ளது,

தமிழின் பல்துறைகளாகிய இலக்கிய இலக்கண விளக்கங்கள், ஆய்வுகள், திறனாய்வுகள், பாராட்டுரைகள், மறுப்புக்கள், மறுப்புக்கு மறுப்புக்கள், கல்வெட்டுக்கள், கவிதைகள், நாடகங்கள்போன்ற பலவும் தமிழ்ப் பொழிலின் படையல்கள். இப்படையல்கள் மரபுவழிவரும் பழமைப்

பொலிவினைப் பூண்டும், பூத்துக்கனியும் புதுமை மெருகினை ஏற்றும் இலங்குவை. தமிழிலக்கிய வுலகில் தனக்கென்று தனித்ததோர் இடத்தைத் தமிழ்ப் பொழில் கொண்டொளிர்கின்றது என்பது உண்மை; மிகையன்று என்பதைத் தமிழறிஞர்கள் நன்குணர்வர். காலம் மாறினும், கோலம் மாறினும் கொண்டகொள்கையிற் பிறழாது தொண்டியற் றும் தமிழ்ப் பொழிலில், தமிழுக்கணிசெய்யும் புதிய பகுதிகளும் இடம்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நம் சங்கத்தின் ஐம்பத்தைந்தாண்டுக்கால வளர்ச்சி, 20-ஆம் நூற்றாண்டுத் தமிழ் கூறும் நல் லுலகின் அரை நூற்றாண்டு வரலாறு. நம் பொழி லின் நாற்பதாண்டுத் தொண்டு நற்றமிழ்த் திறத் தினை நானிலமெங்கும்—தமிழுலகம், மொழிபெயர் தேயம், அலைகடலுக்கப்பாலுள்ள பெருநிலம் ஆகிய வற்றில் உறையும் தமிழர்க்குணர்த்திய பொறு புடைய தொண்டு.

கோழிதமிழ்க் கொள்கையை உயிராகவும் கனிதமிழ்க் கருத்துக்களை உடலாகவும் கொண் டுலவும் நந்தமிழ்ப்பொழிலின் பழங்காலத்தொண்டு நமக்குப் பெருமிதத்தைத் தருகின்றது; நிகழ் காலநிலை நமக்கு நெஞ்சுரத்தை நல்குகின்றது; எதிர்கால எண்ணம் நமக்கு எழுச்சியை அளிக் கின்றது. ஆகவே, இலக்கியக் கோயிலாகிய தமிழ்ப் பொழிலின் பயணம் நீண்ட நெடும் பயணம்....முடிந்துவிடாத பயணம்.... என்றுந் தொடர்ந்து செல்லும் இலக்கியப் பயணம்.

இவ்விலக்கியப் பயணம் இனிது தொடர்ந்து செல்லுதற்குப் பொழிலன்பர்கள் யாவரும் ஒல்லும் வகையிலெல்லாம், உறுப்பினர்களைச் சேர்த்தும், உரிய காலத்தே கையொப்பத் தொகையை அனுப்பியும், உயர்ந்த கருத்துக்களைக்கொண்ட ஒண்டமிழ்க் கட்டுரைகளை அளித்தும் உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சேரன் செங்குட்டுவன்.

(ச. பாலசுந்தரம்)

வாழ்த்து.

ஒன்றும் இருமை விளைவுசெய் முத்தமிழ் ஒண்டிறலால்
நன்றொளிர் நானிலத் தைந்திணை ஆறு நடத்திமகிழ்
துன்றுநல் ஏழிசை எண்சுவை யோடும் தொடர்ந்தளித்து
மன்றுள் நவம்புரிந் தாடுந் தமிழ்ப்பதம் வாழ்த்துதுமே

1 தோற்றம் அறிவறி யாத்தமிழ் அன்னை துணைமலர்த்தாள்
போற்றும் அடியார் புலம்நிறைந் தின்பம் பொலியநிறை
ஆற்றல் அறிவழ காண்மை வழங்கி அருள்கனிந்து
கூற்றங் குதிக்கவும் செய்யுமென் பாரிக் குவலயத்தே

2 வித்த கப்பெருவி ழாந டத்தவும்
முத்த மிழ்க்குல மொய்ம்பினை எள்ளிய
உத்த ரத்திற் குணர்த்தவும் மூலமாம்
பத்தி னிப்பதம் பரவி வாழ்த்துவாம்

3 முப்பெரும் உண்மை முழுதுல கறிய முக்கடல் சூழ்தமிழ் நாட்டில்
ஒப்பரும் வேந்தர் மூவர்தம் திறனும் உயர்தமிழ் மூன்றின தெழிலும்
செப்பருங் கற்பின் மூவகைநிலையும் திகழிசை மூன்றின தமைவும்
தப்பருஞ் சிலம்பால் தந்தொளிர் இளங்கோத் தமிழ்புரை தாளிணை
{ போற்றி!

4 தெய்வஅருள் நோக்கிவிழா எடுப்பார்—வாழும்
தேசத்தின் சீருயர்த்தத் தியாகத் தொண்டு
செய்தவர்க்கும், தாய்மொழியை மேம்ப டுத்தும்
திருப்பணியைப் புரிந்தவர்க்கும் எடுப்பார்நாட்டில்
மெய்தவழ்முத் தமிழ்இளங்கோக் காப்பியத்தில்
வீறுபெறும் கற்பரசி கண்ணகிக்கு
உய்தமிழ்தேர் ஆர்வத்தால் விழா எடுத்தார்
ஒக்கஅவர் மூவர்க்கும் எடுத்தாரன்றோ ?

விழிநகையைப் போற்றிவிழாக் காணின் ஆங்கே
வீறுபெறும் பெண்மைஉயர் வொளிரும், மற்றும்
மொழியின்முக் கூறுயர்ந்து முரசு கொள்ளும்,
முடிவேந்தர் பேராண்மை திசை முழங்கும்
கழிபுகழ்சால் தமிழ்வீரக் கடல் ஒலிக்கும
கவி வானில் தமிழ்நிலவை உலகங்காணும்
பழிதவிர்இவ் விழாக்கண்டார் பாதம் போற்றி
பாராட்டிப் பைந்தமிழால் வாழ்த்துகின்றேன்.

குறிப்பு:—5—6—65-ஆம் நாள் நிகழ்ந்த திருச்செஙகோடு கண்ணகி விழாவிற் பாடப் பெற்றவை.

அவையடக்கம்:

6 மன்றலிலே வாய்சோர்ந்து பிதற்றி நின்ற
வடமன்னர் முடித்தலையில் சிலைக்கல் ஏற்றச்
சென்றுவென்ற செங்குட்டு வன்பந் தற்கீழ்
சிலம்பொலியாற் றமிழ்பரப்பும் சீரிளங்கோ
மன்றினிலே முதாசத்தி காவியஞ்செய்
மகரிசியின் முன்னிலையில்—தமிழ்வளத்தைத்
தென்றலிலே பரப்பிஒளிர் திரைப்ப டத்தில்
தீங்கவிதை இடிமுழக்கும் கண்ணதாசன்

7 தலைமையிலே ; தமிழகத்தின் தன்மா னத்தைத்
தடந்தோளில் தாங்கிநின்ற பொறையன், தேனூர்
மலைநாடு பெற்றெடுத்த மதலைச் சேரன்
வானவர்தம் குலக்கோதை ; வடவைத் தீயாய்
அலைபாயும் மேற்கடலில் நாவாய் ஓட்டி
அடுத்தூர்ந்து பகையழித்த உதியர் செம்மல்
கலைவளரச் சிலைவளைத்த பூழியர்கோன்
கண்ணகிக்குச் சிலைஎடுத்துக் கோயில் கட்டி

8 மண்ணுலகம் வழிபாடு கொள்ளச் செய்த
மாவேந்தன் சீர்த்தியினைப் பாடுகென்றீர்
கண்ணிலி நல்லோவியத்தின் சிறப்புரைக்கும்
கதைக்கெடுத்துக் காட்டானேன், எனினும் ஈண்டுப்
பண்ணிருக்கும் தமிழ்க்கவிதை பாட வல்லார்
பக்கமெலாம் சூழ்ந்திருக்கும் பாக்கியத்தால்
விண்ணிருக்கும் செஞ்சுடரை விரலாற் சுட்டி
விளக்குமொரு அறிஞனைப் போல் விளம்பலுற்றேன்

வேண்டுகோள்,

9 பண்டிசை கமழவாழ்ந்த பாணரும் இளங்கோவாயாற்
றண்டமிழ் ஆசானென்று சாற்றிய சாத்த னாரும்
அண்டரும் போற்றுந் தூய அடிகளும் தம்செந் நாவால்
எண்டிசை திகழ ஏத்தி இயம்பிய வேந்தை என்றன்

10 புல்லிய மொழியாற் போற்றிப் புனைவதற் கொப்பி னேன்என்
வல்லமை யாலேஅன்று ; வளர்தமிழ் அன்னையின்பால்,
எல்லையில் காதல்கொண்ட இயல்பினால்—இமயங் கண்ட
வில்லவன் பெருமை பேச விரும்பினேன், கரும்புதின்போர்

11 ஒக்கவென் கவியில் தீஞ்சா றுளதெனின் மடுப்பீர், முற்றும்
சக்கையே எனினும் அன்பால் தள்ளுதல் செய்வீர், ஆங்கே
சுக்கொடு மிளகும் சற்றே தோன்றினும்தோன்றும் வேண்டின்
புக்கெடுத் துண்பீர் வேண்டார் பொறுத்தருள் செய்வீர் நன்றி

பொருள்:—

12 மண்பெற்ற மன்னர் மரபுபல வற்றுள்ளும்
பண்பில் திரியாப் பழங்குடியாம், பார்மீது
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்தகுடி மூவேந்தர் அக்குடியில்
செந்தீக் குலமென்னும் சேரர்குலம் பெற்ற
நந்தா விளக்கம்; தென் நாடு கருவுயிர்த்த
பொங்கரிமா; பொற்கோட் டிமய வரம்பமைத்த
துங்கன்; நெடுஞ் சேர லாதற்குத் தூயபுகழ்
நல்குபெருங் கோப்பெண்டு நற்சோணை ஈன்றளித்த
செல்வமகன்; செந்தமிழர் சீர்த்தி விளக்கவந்த
வல்லமகன்; வேந்தர்க் கரியேறு; வஞ்சிக்கோன்.
பாணர்க்கு வற்றா தளிக்கும் பருவமழை!
வீணர்க்குச் செந்நெருப்பு! வீரமறவர்க்கு
வேறுபடா மெய்ம்மறை! ப்பா வேந்தருக்குப் பொன்மாரி
மாறுபட வந்து மயங்கி மனச்செருக்கால்
முற்றும் பகைநெருப்பை மூலமின்றிப் பெய்தவிக்கக்
கற்ற கரியமுகில் காந்தும் பகையானை
மத்தகத்தை கீறி மதங்குடிக்கும் போர்வேங்கை
செந்தண்மை பூண்டார்க்குத் தென்றல்; திசைகெட்டு
நொந்தவர்க்குக் காப்பளித்து நோக்கும் பெருங்கோயில்
மாறன் கணையஞ்சும் வேண்மாள் மனங்குளிர
ஏறிக் குழைந்தாடும் இன்னருவி—தன்குடைக்கீழ்
வாழும் பெருங் குடிக்கு வற்றாத தீஞ்சுனை, சொல்
சூழும் புகழ் மேகம் தூங்கும் பெருமலை, தன்
மானக் குறை நேரின் வாழாக் கவரிமா
மீனும் புலியுந் தன் வில்லோ டுயர்த்துதிசை
எட்டும் ஒளிவீசும் தண்ணிலவு; சேரன்செங்
குட்டுவனார் என்று குணவாயிற் கோட்டத்
தரசு துறந்திருந்த அண்ணலிளங் கோவும்
பரசுந் தமிழ்க்கவிதை தந்த பரணரொடு
சாத்தனா ரும்புகழ்ந்த தார்வேந்தன்; தென்னாட்டில்
குடமலையில் தோன்றி வடவிருளைச் சீய்த்த
சுடர வன்செங் குட்டுவனார் தொல்பெருமை முற்றும்
விரிக்கப் புகுதல்விண் மீன்குழுவை எண்ணித்
தெரிக்க முயல்வதொக்கும் என்றாலும் தேர்ந்தளித்த
ஊக்கத்தால் உள்ளங்கொள் ஆசையினால் நாலைந்து
பாக்களினாற் சொல்வேன் பணிந்து.

13 செங்கையிற் கோலை ஏந்திச் சேரநா டாண்டசெம்மல்
தன்குலத் தாய்க்குவீடு தரும்புனல்நீத்தம் என்று
கங்கைநீ ராட்டச் சென்ற காலத்தவ் வடக்கு மன்னர்
பொங்கிவந் தாயி ரம்பேர் பொருக்கென வளைத்த போது

14 கொண்டதோர் செருவெங்கோலம் கூற்றமே கண்விழித்துக்
கண்டதப் படைகள் ஆலைக் கரும்பெனக் கழிந்த; என்று
விண்டனர் இளங்கோஅந்த வீரத்தை ஆய்ந்தால் தாய்மேல்
கொண்டநற் பற்றுத் தோன்றும் குட்டுவன் சிறப்பீதொன்று.

15 இருபெருவேந்தர் தன்னோ டெதிரிய போது கொங்கர்
பொருகளத் தவரைவென்று புலியொடு கயலை வென்ற
செருவினல் தமராஞலும் பிழையினைத் திருத்தி ஆளும்
பெருமதி தோன்றும்; நட்பின் பெருந்தகவு என்னசொல்வேன்

16 அருமைஎன் பானுக்காக அருஞ்சமர் பழைய ஞேடு
திறம்படப் புரிந்துவென்ற செய்தியே சாலும், மற்றும்
உறவினர்க் குதவும் பண்பை ஒன்பது சோழரோடு
மறம்புரிந் தரசும் நாடும் மைத்துனற் களித்தல் காட்டும்.

17 வலந்தரு பொருளைஏற்றி வாணிகஞ் செய்வார் வங்கம்
புலம்புறு மாறுசெய்து பொருள்கவர்ந் தழிக்குந் தீய
சலந்திகழ் குழுவைக் கொல்ல தண்டகடற் பரப்பில்நாவாய்க்
குலம் பல செலுத்தி அந்தக் குறும்பரின் கொடுமைவென்று

18 கடல்பிறக் கோட்டிய(ச்)செங் குட்டுவன் ஆனன் அந்த
அடல்குறித் தாய்ந்தால் சேரன். ஆட்சியில், வாணிகத்தார்
முடம்படின் முடிவாழ்வில்லை என்றவன் அறிவுதோன்றும்
குடமலை மன்னன் பெற்ற குணங்களுள் இதுவும் ஒன்று

19 தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா தமைந்த நெடும்புகழ்க் குட்டுவன்
புரவலர்ப் பொறுப்புணர்ந் தாண்டவன் என்பதை
"மழைவளங்காப்பின் வாண் பேரச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பேரச்சம்
குடிபுரவுண்டும் கொடுங்கோலஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பமல் லது தொழுதக வில்"லெனப்
பாண்டியன் இறந்த பருவரல் கேட்டநாள்
அருளிய சொற்கள் பொருள்பெறக் காட்டும்
தன்குடிப் பிறப்பும் தகுதியும் ஆற்றலும்
நன்கறிந் தவ்வழி நடந்தனன் என்பதை
"பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு
முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தல்
மறத்தகை நெடுவாள் எங்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வரூஉம் செய்கையோ அன்று" என
இமயஞ் சென்ற எழுச்சியே காட்டும்
தமிழக வேந்தர்க் குற்றவை எல்லாம்
தனக்குற் றவையாத் தகவொடு கருதி
மானங் காத்த மறவன் என்பதும்
தன்னிழல் வாழுநர் நடுங்கா வண்ணம்

சூழுறு பகையினைத் துடைப்போன் என்பதும்
"இமயத் தாபதர் எமக்கீங் குணர்த்திய
அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவ தாயின் ஆங்கஃது
எம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியும் தருஉம்
வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்
கடவுள் எழுதுவோர் கற்கொண்டல்லது
வறிது மீளுமென் வாய் வாளாகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉம் கோலே னாகென"
துடிப்புறு சூளுரை வெடித்தமை காட்டும்
எடுத்த கொள்கையை முடித்துநிலை நிறுத்தும்
குட்டுவன் குணங்களைக் கூறுதல் எளிதோ?

20 நாடகம் ஆடும் பெம்மான் நல்லடி முடியிற் கொண்டோன்
ஆடக மாடத்தின்கண் அறிதுயில் கிடந்த மாலின்
சேடமும் திருத்தோள் தாங்கிச் சிவமணங் கமழுஞ் சேரன்
பாடகச் சிலம்பு பூண்ட பத்தினிக் கோட்டஞ் செய்து

21 போற்றினன் சாத்தனாரின் புத்தமும் இளங்கோ நூலுள்
சாற்றிநன் கொழுகி நின்ற சைனமும் சமமாகக் கொண்டு
நோற்றநல் லறிஞர்; நூலோர் நுவல்பரம் பொருளே யாவும்
தோற்றிய தென்று கண்டுதுணை புரிந்தாண்ட செம்மல்

22 தரைமகளைத் தன்குடைக்கீழ் மணந்த வேந்தர்
தாமரையாள் இருவரையும் மணத்தலோடு
செருமகளும் புகழ்களும் தன்னைவிட்டுச்
சிறுபொழுதும் பிரியாமல் அணைத்தல் வேண்டும்
அரசுடைய வேந்தொருவன் ஐந்துபேரை
ஆண்மையினால் மணந்து வக்க வேண்டுமென்று
பெருமதியோர் உணர்த்தியசெம் பொருளை ஓரார்
பிழையாக ஐவர் முதல் ஆயிரம் பேர்

23 வேண்டுமென மணந்தறிவு வேறுபட்டு
விழலானார் குட்டுவனும் சேரர் செம்மல்
நாண்டகைய இளங்கோ வேண்மாளை யன்றிக்
காரிகையார் பிறருள்ளாக் கருத்தினாலே
நீண்ட புகழ் எய்தியசீ ராமன் போல
நெடியோனாய் இலக்கியத்தில் தோன்றுகின்றான்
பூண்ட அறஞ்சிதையாமல் புவியைக் காத்த
புரவலனின் தலையாய பண்பீ தொன்று

24 பண்புசெயல் நோக்கமெனும் இம்மூன்றும்மே
பாத்திரத்தை அளந்தறியும் கருவி ஒன்ற
நண்பு கொளச் செய்வனவும் பொதுவும ஆகி
நாடாமற் செய்வனவும் அவையே காணும்
பண்புசெயல் இணைந்திருந்தும் நோக்கம் இல்லாப்
பாத்திரத்தால் பரோர்க்கும் பயனே இல்லை
வண்புகழ்சேர் குட்டுவனின் குறிக்கோள் மூவர்
வளர்தமிழை மண்ணில்நிலை நிறுத்தலாகும்.

25 வாய்காவா தெள்ளியசொல் மனம் பொருமல்
வடமன்னர்ப் புறங்கண்டு போர்க்களத்தில்
பேய்தாவச் செய்திமய வெற்றி கண்ட
பேரரசன் பிறந்ததமிழ் மலைநாடு இந்நாள்
தாய்காவா தம்மொழிக்கே தலைகொடுத்துத்
தனியினமாய்ப் போன நிலை எண்ணின் நெஞ்சில்
நோய்தாவும்; ஆதியுலா—பதிற்றுப்பத்து
நூலோடு சிலப்புதந்த சேர நாடே!

26 ஏமாந்த பொழுதிமயம் இந்தியர்க்குச்
சொந்தமெனக் கொண்டார் யாம்மீட் போம் என்று
காமாந்த காரன்செய் கயமை போலே
கருத்தில்லாச் சீனர் இன்று கர்ச்சிக்கின்றார்
கோமான்செங் குட்டுவன் போல்; ஒருவரில்லாக்
குறையென்று மேடைகளிற் பேசுகின்றோம்
நாம் ஆரோ? அவன்மரபென் றியம்புதற்கு
நாணுகின்றேன் நாமெல்லாம் நாடாள்கின்றோம்!

27 என்னையும் அழைத்துச் சற்றே இன்றமிழ்க் கவிதை பாடச்
சொன்னநல் லறிஞர்கட்கும்; சுவையிலா என்வி ருந்தை
அன்னைகொள் மழலைபோலே அருந்திய அவையோர்கட்கும்
மன்னிய தமிழ்க்கும் என்றன் மனம்நிறை வணக்கம் நன்றி

சங்க அரங்கம்......

கரந்தைப் புலவர் கல்லூரி.

1964-65 பல்கலைக் கழகத் தேர்வு விவரம்:

	தேர்வு எழுதியவர்	முதல் வகுப்பு	இரண்டாம் வகுப்பு	மூன்றாம் வகுப்பு
முதனிலை:	27	..	4	19
நிறைவு நிலை:	27	3	3	20

துறவி.

கு. சிவமணி.

அறிமுகம்.

[சேரமான் நெடுஞ்சேரலாதன், சோழன் மகள் நற்சோணை இருவருக்கும் பிறந்த மக்கள் இருவர். இருவரில் மூத்தவனே, பின்னாளில் பத்தினித் தெய்வத்திற்குக் கோவிலெடுத்த பேராண்மையாளன், செங்குட்டுவன்; காவாநாவிற் கனகவிசயருக்குத் தென் தமிழர் ஆற்றலை உணர்த்திய தமிழ் மறவன். இளையவரே, இளமையிலேயே துறவு நெறி மேற்கொண்ட அருளாளர் இளங்கோவடிகள்.

அரச வாழ்விலே புரளவேண்டிய இளங்கோ, ஆராயாது கூறிய கணியனின் புன்னுரையைப் பொய்யாக்கிப் பெருமைகொண்ட நிகழ்ச்சியே இவ்வரலாறு.

ஐம்பெருங்காப்பியங்களில் தலையாய முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தைத் தமிழனுக்குச் சூட்டிய அடிகளாரின் இளமைக் காலத்தில் ஏற்பட்ட புதுமை வரலாறே இச்சிறு நாடகமாகும்]

காட்சி — 1.

இடம் : அரண்மனையில் ஓர் அறை.

உறுப்பினர் : செங்குட்டுவன், வில்லவன்.

நிலைமை : செங்குட்டுவன் கண்ணாடி முன்னின்று தன்னை ஒப்பனை செய்து கொள்கிறான். அப்போது அவன் நண்பன் வில்லவன் நுழைகின்றான்.

வில்லவன் : (இரு கைகளையும் கூப்பியபடி) இளவரசே! வணக்கம்.

செங்குட்டுவன் : (திரும்பியபடி) நண்பன் வில்லவனா? வா, வா.

வில் : ஆண்டுதோறும் வழக்கமாக நடைபெறும் வீர விளையாட்டுப் போட்டியில் தேற்று, தாங்கள் பெற்ற வெற்றியைக் குறித்து, இச் சேரநாடே வியந்து பாராட்டுகின்றது.

செங் : நாடுகாக்கும் மன்னர் குடியில் பிறந்த நான், வீரத்தில் சிறந்திருப்பது வியப்புக் குரியதல்லவே, வில்லவா!

வில் : "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?"

செங் : (பெருமிதமாக) என் தந்தையார் நெடுஞ்சேரலாதரின் போர் வலிமுன் யாருமே நிற்க முடியாது.

வில் : "என் தமையன் செங்குட்டுவனின் வாள் வீச்சுக்கள், மேகக் கூட்டத்திடையே எழும் மின்னற் கீற்றுக்கள்" என்று உங்கள் இளவலும் அடிக்கடி புகழ்ந்துரைப்பார்.

செங் : (இளநகை பூத்தவாறு) என் இளவல் இளங்கோவுக்கு இலக்கியம், என்ருல் உயிர். அவனது பேச்சே அழகான இலக்கியம். அவன் எதையும் இலக்கியக் கண்கொண்டே நோக்குகின்ருன். "உயிர் — தமிழுக்கு" என்று அடிக்கடி அவன் முழங்குவதைக் கேட்டு இருக்கின்றேன்.

வில் : ஆம், இளவரசே! எத்திக்கும் புகழ் மணக்கும் முத்தமிழ் அவரது சித்தத்தில் எந்நேரமும் உறைவதை இந்நாடே நன்கயுறிம்.

செங் : இச்சிறு வயதிலேயே, நற்றமிழ்ப் புலவர்கள் வியந்து போற்றும் பெற்றியை உடையவன் இளங்கோ! கற்பாறை மனத்தையும் தனது சொற்றிறத்தால் கனிவாக்க வல்லவன்; இன்மொழியால் எல்லோரையும் ஈர்க்கும் சொல்லேருழவன்........ என்னருந்தம்பி இளங்கோ என்று சொல்வதற்கே நான் எவ்வளவு பெருமை கொள்ளுகிறேன், தெரியுமா?

வில் : தமையனுக்கு எற்ற தம்பி, தம்பிக்கு ஏற்ற தமையன்! உங்கள் இருவருக்கும் உடல் இரண்டு; ஆனுல் உயிர் மட்டும் ஒன்று. உங்கள் உள்ளப் பாங்கை எவரும் எளிதில் கொள்ள முடியாது.

செங் : இளங்கோவை இன்னும் காணேமே? எங்குச் சென்றிருப்பான்?

வில் : (சிறிது அமைதிக்குப் பின்) எங்குச் சென்றிருப்பார்?...... முத்தமிழ்க்கடலுள் மூழ்கிப் புத்தொளி வீசும் முத்துக்கள் பலவற்றை எடுப்பதில் முனைந்திருப்பார்.

செங் : ஆம், வில்லவா?...... காலம் போவதே தெரியாமல்பழைய ஓலைக் குவியலுக்குள். உள்ளதைப் பதித்து விடுகின்ருன்.......

செந்தமிழ்ச்சுவடி ஒன்று கிடைத்துவிட்டால் போதும். அதைப் படித்து முடிப்பதற்கு முன் அவனது சிந்தனையை எவரும் கலைக்க முடியாது.

வில் : இளவரசே! எனது சொற்களைப் பொறுத்தருள வேண்டும். அவருக்கு அரசியல் துறையில் விருப்பமே இல்லை; ஆனுல் இலக்கியச் சிந்தனையில்மட்டும் எல்லையிலா ஈடுபாடு!......... நாட்டைக்காக்க வேண்டியவர் பாட்டெழுதும் புலவர்போல நாட்களைக் கழிக்கலாமா?

செங் : வில்லவா: அவ்வாறு சொல்லாதே: இளங்கேவின் திறம் எனக்கு நன்ருகத் தெரியும். அரசர் இருக்கலாம்; புகழ் பெறலாம்; இறந்த பின்னர் அவரது நினைவே மக்களால் மறக்கப்

படலாம். ஆனல், புலவர் படைத்த பேரிலக்கியம் என்றும் பொன்ருது, வருங்கால மக்களால் பொன்னென மதித்துப் போற்றப்படலாம். (சிறிது நிறுத்தி) அரச வாழ்வு நிலையற்றது. இலக்கிய வாழ்வு, நிலைபெற்றது...... இவ்வுலகே போற்றிப் புகழும் முத்தமிழ் வித்தகனுக, என் இளவலும் எதிர்காலத்தில் திகழுவான் என எனது மனம் சொல்கின்றது.

(அப்போது செங்குட்டுவனின் தாயாகிய அரசமாதேவி நற் சோணை நுழைகிருர்)

செங் : வணக்கம் அன்னையே! (வில்லவனும் வணங்குகின்ருன்)

நற்சோணை : வாழ்க, மைந்தா ; ... இளங்கோ எங்கே? (இருக்கையில் அமரல்)

செங் : உங்களோடு அங்கில்லையா ?

நற் : இல்லை செங்குட்டுவா! ... ஒருவேளை மன்னரோடு உரையாடிக்கொண்டிருப்பான் ... வில்லவா!

வில் : அன்னையே!

நற் : நீ சென்று இளங்கோவை உடன் அழைத்துவா.

வில் : தங்கள் ஆணைப்படியே! (வில்லவன் நீங்குகின்ருன்)

செங் : அம்மா !... இப்போது நினைவிற்கு வருகிறது ... இளங்கோவின் நெருங்கிய நண்பர், புலவர் சாத்தனுர் மதுரையிலிருந்து வந்திருந்தார். ஒருகால் அவரோடு நூலகம் சென்று ஏட்டுச் சுவடிக்குள் எதையாவது தேடிக்கொண்டிருப்பான்.

வில் : (நுழைந்துகொண்டே) அவர் அங்கும் இல்லை. இளவரசே! (நெடுஞ்சேரலாதன் நுழைகின்ருன். அனைவரும் வணங்குகின்றனர். அவன் மனைவி நற்சோணை இருக்கையை விட்டு எழுகின்ருள். சேரலாதன் இருக்கையில் அமர்கின்ருன்.)

சேரலாதன் : நற்சோணை ; நீ இங்கா உள்ளாய்?

நற் : (அருகே அமர்ந்தவாறு) ஆம் அரசே!...நம் இளைய மைந்தன் இளங்கோவைக்காண வந்தேன்.

சேர : நானும் அவனைத்தேடியே வந்தேன் ... நேற்றிரவு நற்றமிழ்ப்பாடல் ஒன்று புனைந்தான். 'அதனைப்பாடிக்காட்டு' என்றேன் ; 'நாளை ஆகட்டும்' என்ருன். காலை முதல் அவன் என் கண்ணில் படவே இல்லை. இப்போது அவன் எங்கே?

செங் : தந்தையே! அவனைத்தேடி வரத்தான் வில்லவனை அனுப்பினேன்.

வில் ; அரசே! அரண்மனையில் எல்லா இடங்களையும் சென்று பார்த்தேன். அவரைக் காணவில்லை.

செங் : (சிரித்துக்கொண்டே) பற்பல இடங்களில் நீ தேடினாலும் அவன் எங்காவது ஓரிடத்தில்தானே இருக்கமுடியும். நீ அந்த இடத்தை மட்டும் விட்டு வந்தாய்.

வில் : (குறும்பாக) அந்த இடம் எந்த இடம் என்று இளவரசர் சொன்னால், சென்று பார்த்து வருவேன்.

செங் : வில்லவா! வேனிற்காலச் சித்திர மண்டபம் சென்று பார்த்து வா. (அப்போது மெல்லிய குரலில் இசை ஒலிக்கிறது)

நற் : இளங்கோதான் பாடுகின்றான். (பாட்டு நன்றாக் கேட்கின்றது)

> " உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
> உள்ளத்துள் எல்லாம் உளன் "
>
> " பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மை உண்டாகப் பெறின்."
>
> " ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும் ".

(பாட்டு முடிகின்றது)

- காட்சி முடிவு -

காட்சி—2.

இடம் : அரசவை.

உறுப்பினர் : அரசவைப் பெருமக்கள்; கட்டியங்காரன்.

நிலைமை : அனைவரும் அமைதியாக அமர்ந்திருக்கின்றனர். அப்போது கட்டியங்காரன் நுழைந்து அரசரின் வரவுரைக்கின்றான்.

கட்டியங்காரன் : (உரத்து) வானவர் குலத்தோன்றல்! வில்லவர் காவலர்! மலைநாட்டு மன்னர்! அவைக்கு எழுந்தருள்கின்றார்! (நெடுஞ்சேரலாதன்; நற்சோணை; செங்குட்டுவன், இளங்கோ நுழைகின்றனர்; அனைவரும் எழுந்து வணங்குகின்றனர்.)

கட்டி : பேரரசர் நெடுஞ்சேரலாதர்!

அனைவரும் : வாழ்க!

கட்டி . அரசமாதேவியார்!

அனை : வாழ்க!

கட்டி : இளவரசர்!

அனை : வாழ்க! (நெடுஞ்சேரலாதன் அரியணையில் அமர்ந்ததும் அனைவரும் அவரவர் இருக்கையில் உட்காருகின்றனர்.)

அமைச்சர் : (எழுந்து) அறநெறி படரும் வேந்தே! தங்கள் அமைச்சனின் பணிவார்ந்த வணக்கம், இமயமலையிலிருந்து வந்த கணியன் தங்கள் ஆணைவேண்டி வாயிலில் காத்துள்ளான்.

நெடுஞ்சேரலாதன் ; (பெருமிதத்துடன்) நல்லது அமைச்சரே! ...காவல! (ஒருவன் வணங்குகின்றான்) அக்கணியனை விரைவில் இங்கு அழைத்துவா! (காவலன் நீங்குகின்றான்)

அமை : இனிமேல் நடக்கப்போவதை முன்கூட்டியே எடுத்துச் சொல்வதில் தன்னை வல்லவன் என்று சொல்லிக்கொள்கின்றான், அக்கணியன்.

நெடுஞ் : ஓ! அப்படியா! அவனது திறமையை நாமும் கேட்டு அறிவோம். (கணியன் நுழைந்து பணிவுடன், அரசனை வணங்குகின்றான்,)

கணியன் : நீடு புகழ் படைத்த பீடு கெழு வேந்தே! வணக்கம்... நான் இமயமலைச்சாரலிலுள்ள சிற்றூரிலே பிறந்தேன் : அங்குள்ள பற்பல துறவிகளை அடுத்து இக்கணியக்கலையைக் கற்றேன். பல்லாண்டுகள் பயின்ற பின்னர், உற்றதும் மேல் உறுவதும் கூறக்கூடிய ஆற்றலைப்பெற்றேன். பற்பல நாட்டு அரசர்களும் எனது திறமையைப் பாராட்டிப் பரிசுகள் கொடுத்துள்ளனர்.

நெடுஞ் : நன்று. மேலே சொல்லும்.

கணி : அரசர் திருமுன்னும் கற்ற கலையைக் காட்டிப் பரிசு பெற்றுப்போகவே வந்தேன். தாங்கள் எதைப்பற்றிக் கேட்பினும் அதன் விளைவை என்னால் சொல்ல இயலும்.

நெடுஞ் : நன்று...(சிறிது சிந்தனை) நாடாளும் பொறுப்பை ஏற்ற நாம் நாட்டின் நலத்தைத்தவிர வேறு எதைப்பற்றிக்கேட்கப் போகின்றோம்.

அமை : கணிய! நாட்டின் எதிர்காலத்தைப்பற்றி உன்னால் சொல்லக்கூடுமா ?

கணி : (எள்ளல் குறிப்புடன்) இந்நாட்டின் எதிர்காலம் என்ன ? இவ்வுலகின் எதிர்காலத்தையே வேண்டுமானாலும் என்னால் கூற முடியும். (இளவரசர் இருவரையும் கூர்ந்து பார்க்கின்றான்.)... அரசருக்குப்பின்னர் இந்நாட்டு அரியணையில் அமர்வாரைப் பற்றிக்கூறட்டுமா ?

அமை : நாடறிந்த உண்மையை நீ தான் சொல்லவேண்டும் என்பது இல்லை...பரம்பரை வழக்கப்படி அரசருக்குப்பின் மூத்த இளவரசர் செங்குட்டுவரே அரசராவார்.

கணி : பரம்பரைப்பழக்கத்திலே ஒரு புதுமை விளைய இருப்பதால் தான் அதைக் குறிப்பிட்டேன்,

அமை : என்ன புதுமையைச் சொல்லப்போகின்றாய் ?

கணி : (இளவரசர் இருவரையும் மறுமுறை நன்ருகப் பார்க்கின்ருன். குறுக்கும் நெடுக்குமாகக் குழம்பிய மனத்துடனே நடைபோடுகின்ருன்)... நாஞகச் சொல்வதாக நினைக்காதீர்கள். கணியம் அவ்வாறு கூறச்சொல்கிறது. 'அப்புதுமையைச் சொல்ல எனக்குக் கொஞ்சம் அச்சமாக இருக்கிறது.

அமை : (கொஞ்சம் சினத்தோடு) ஏய், கணிய! எல்லோரின் சிந்தனையையும் குழப்பிவிட்டு, இப்போது அதைச்சொல்வதற்கு அச்சமாக இருக்கிறது என்று கூறி மழுப்புகின்ருயே! இது அரசவை, உனது தொழில் முறையைக் காட்ட இது இடமன்று.

கணி : அரசவை ஆயிற்றே என்றுதான் சற்றுத் தயங்குகின்றேன். வேறிடமாயிருப்பின் இந்நேரம் கூசாமல் கூறியிருப்பேன்.

நெடுஞ் : கணிய! உண்மை, அச்சத்திற்கு அப்பாற்பட்டது; துணிந்து சொல்...

கணி : நன்றி அரசே! நான் அதைச் சொல்ல வேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன். இருப்பினும் பின்னுல் நிகழ இருப்பதை முன்னரே சொல்லுகிறேன். ஆகவே, என்பால் அருள் கொண்டு என்னைப் பொறுத்தருள வேண்டுகிறேன்

அமை : விரைவில் சொல்...

கணி : அப்படியே! ... அரசே! ... தங்கள் மக்கள் இருவரையும் கூர்ந்து நோக்கும்போது எனது மன்த்திற்பட்டதை அப்படியே உரைக்கின்றேன்...(சிறிது அமைதி) இருவரையும் பார்க்கும்போது ...பார்க்கும்போது...

நற் : (படபடப்புடன்) மக்களுக்கென்ன, ஐயா!...ஏதாவது நடக்கக் கூடாதது...

கணி : அரசமாதேவியே! அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை...

நற் : பின் ஏன் தயங்குகிறீர் ?

கணி : இருவர்' முகக்குறிப்பையும் அரச இலக்கணங்களையும் கொண்டு ஆராயுமிடத்து, மூத்தவர் இருக்க இளையவருக்கே அரசுரிமை வந்தெய்தும் என்று தோன்றுகிறது. (செங்குட்டுவன் இதைக்கேட்டு மென்முறுவல் பூக்கின்ருன்.)

இளங் : (வெகுண்டெழுந்து) பொய்! நம்ப முடியாத பொய்! நடக்க முடியாத கற்பனை !

கணி : (அமைதியாக) பொறுத்தருள வேண்டும். இளவரசே! நாஞக எதையும் இட்டுக்கட்டிச் சொல்லவில்லை......கணியக் குறிப்பு அவ்வாறு சொல்கிறது.

இள : (சீற்றத்துடன்) எது சொன்னுலும் சரி: எவர் சொன்னுலும் சரி, அதை என்னுல் ஏற்கமுடியாது. என் தந்தையார்க்குப் பின்னர் அரசுரிமை எய்தவேண்டியவர் என் தமையன் செங்

சூட்டுவன். அதுதான் முறை; அந்த முறையிலே ஒரு குறையா? கூடாது. தமையன் இருக்கத் தம்பிக்கு அரசுரிமையா? தகாது,' இது நடவாது.

கணி : இளவரசே! பொறுமையை இழக்கவேண்டாம்.

இள : கணியரே! இந்நேரம் விளையாட்டிற்காவது, வேறு எவரே னும் இதைச் சொல்லியிருந்தால் அவர் உயிரோடிருத்தல் அரிது. ஏதோ ஒரு கலையை நீர் பயின்றவர் என்று சொலலிக் கொள்வதால் நீர் பிழைத்திருக்கின்றீர்.

கணி : இளவரசே! எனது கணியம் இதுவரையில் பொய்த்ததே இல்லை வரும் பொருள் உரைப்பதில் என்னைவிட வல்லவர் இந்நிலவுலகில் எவரும் இல்லை என்பதைத் தங்களுககு நினைவு படுத்த விரும்புகிறேன்.

இள : போதும் உமது புலம்பல்!

கணி : நான் சொல்வது இப்போது புலம்பலாகப்படலாம்... தாங்கள் அரியணை ஏறியதும் இந்த அடியேனையும் நினைவில் கொள் ளுங்கள்,

இள : உமது கணியம் பொய். நீர் சொல்லியதும் பொய்!

கணி : (ஏளனமாக) நீங்கள் அறியாப்பிள்ளை. கணியத்தின் பெருமை தெரியாமல் ஏதோ பேசுகிறீர்கள். .ம்...பேசுங்கள்...பேசுங்கள்.

இள : (சினம் பொங்க) எதையாவது தாறுமாறாக உளராதீர்! கலையை நன்கு கற்றறியாத அறிவிலியே! நீர் சொன்னதை என்னால் பொய்யாக்க முடியும்.

கணி : அன்று எழுதியதை இனி யார் அழித்து எழுத முடியும்?

இள : நீர் கூறியதை என்னால் மாற்றி எழுத முடியும்.

கணி: உணர்ச்சி மிக ஏதோ சொல்லுகிறீர்கள்!

இள : சொல் ஒன்று; செயல் ஒன்று என்று இதுவரையில் நான் நடந்தறியேன்; இனியும் நடக்க மாட்டேன்!... (சிறிது அமைதி. பெருமிதமாக) அவையோர்களே! கணியர் சொன்னவற்றைக் கேட்டீர்கள். அதை மாற்றி அமைக்க என்னால் இயலும் என்பதைக் காட்டப்போகின்றேன். இளவரசனாக இருந்தால் தானே அரசுரிமை வந்தடையும்...ஆகவே...

நற் : இளங்கோ! விரைந்து எதையும் கூறிவிடாதே!...

இள : (புன்னகையுடன்) ஆகவே...இக்கண முதல்... அரச வாழ் வைத் துறக்கின்றேன். என்னை ஈன்றெடுத்த என் அன்னையார் அரசமாதேவியார்மீது ஆணையிட்டு இதனை உறுதி செய்கின்றேன்.

செங் : (திகைப்புடன் எழுந்தவாறு) தம்பி!

நற் : (பதைத்தெழுந்து) மைந்தா!

நெடுஞ் : (அமைதியாக) இளங்கோ! (இளங்கோ இளநகை பூக்க அமைதியாக நிற்கின்றார். அரசர் எழவே அவைப்பெருமக்கள் அனைவரும் எழுந்து நிற்கின்றனர். கணியனின் உடல் நடுங்குகின்றது. அவையில் சிறிது நேரம் ஆழ்ந்த அமைதி குடிகொள்கின்றது.)

கணி : (மெதுவான குரலில்) இளவரசே!

இள : (புன்னகை பூத்தபடி) கணியரே! திடுக்கிடாதீர்.

நற் : இளங்கோ! என் செல்வமே! ஏனடா இந்த விரைந்த முடிவுக்கு வந்தாய்? கோடிக்கு ஒருவன் நீ! இனிமேல் கோடியில் ஒருவனாகவா மாறவேண்டும்? பூத்துக்காய்த்துப் பழுத்துக் குலுங்க வேண்டிய வயது உனக்கு! அதனால் பொங்கும் மகிழ்ச்சி எமக்கு! வாழ்வாங்கு வையத்துள் வாழ்ந்து களைத்த பின்னரே துறத்தல் உலக இயல்பு. அதைவிடுத்து, வாழ்வின் நுழைவாயிலிலே அடியெடுத்து வைக்க வேண்டிய நேரத்தில், துறக்கின்றேன் என்று சொன்னால் பெற்ற வயிறு பொறுக்குமா?...என் கண்ணல்ல! நான் சொல்வதைக்கேள்! அருள்கூர்ந்து உனது முடிவை அடியோடு மாற்றிக்கொள்.

இள : அன்னையே! தங்கள்மீது ஆணையிட்டு அறிவித்த பின்னர் அதை மாற்றுவதற்கே வழி இல்லை. மாற்றுவதற்கு விருப்பமும் இல்லை. சின்னவன் செய்த செயலைப் பொறுத்தருள வேண்டுகின்றேன்.

நெடு : (தோளைப்பற்றியவாறு) இளங்கோ! இயல்பாகவே அறிவிற் சிறந்த உனக்கு எவரும் எதையும் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. உனது அறிவு ஆணையிடும் வழி நடப்பதே பெருமைக்குரியதாகும்.

இள : தந்தையே! என்னைப்பற்றி நன்கு உணர்ந்தவர் தாங்கள் ஒருவர்தாம்.

நெடு : அரச வாழ்வைத் துறப்பாரைக் காண்பது அருமை! தமையனுக்காகத் தனது வாழ்வையே இழக்கத் துணிவது புதுமை! வைரம் பாய்ந்த உனது நெஞ்சம் வளர்க! வாழ்க! வரலாற்றிலே உனக்கென ஓர் இடத்தை இன்றே பெற்று விட்டாய்! நெடுஞ்சேரலாதன் மகன் இளங்கோ தன் தமையனுக்காக முடிதுறக்கின்றான் என்னும் நிகழ்ச்சி எமக்கெல்லாம் இடியாக வாய்ப்பினும், காலமென்னும் ஏட்டினியே கோல எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு என்றும் நிலையாக ஒளி வீசும்.

இள : தந்தையே! தங்கள் வாழ்த்துக்கு எனது வணக்கம்.

செங் : (கண்ணீர் பொங்க) இளங்கோ! என்னருமைத் தம்பி! எவனோ ஒருவன், வயிற்றுப் பிழைப்புக்காக ஏதோ ஒன்று சொன்னான் என்பதற்காக நீ ஏன் இவ்வரச வாழ்வைத் துறக்கவேண்டும்? ......வேண்டாம்......இந்தக் கொடிய முடிவு வேண்டாம்.

இள : வீரமே உருவான நீயா இப்படிக் கோழையாக மாறிவிட்டாய்?

செங் : என் செய்வேன், தம்பி! உன்மேலுள்ள அளவுகடந்த அன்பு என்னைக் கோழையாக்கிவிட்டது.

இள : மனங்கலங்காதே!

செங் : பகைவரின் படை தொகை தொகையாக வந்து குவிந்தாலும் ஒரு பகல் எல்லையுள் அனைத்தையும் அழிக்கும் மனவலிமை எனக்கிருப்பினும், உடன் பிறப்பு உணர்வின் முன்னர் நான் ஊமையாகிவிடுகின்றேன். கணியன் சொன்னவாறே நிறைவேறினால்தான் என்ன? நம் தந்தையார்க்குப் பின்னர் இந்நாட்டை நம்மிருவரில் யார் ஆண்டால் என்ன? அன்னையாரைப் பார்!... இன்னலே உருக்கொண்டதுபோல் கண்ணீர் வடிக்கின்றார்கள்.... தந்தையாரைப் பார்!... தணியாத அன்பினை நீறு பூத்த நெருப்புப்போல் தன்னுள்ளே வைத்துக் குமுறுகின்றார்கள். அரசவைப் பெருமக்களைப் பார்!... அச்சடித்த பதுமைகளாக ஆகிவிட்டனர். நின் பிரிவை ஒரு கணமும் உணர்ந்தறியா என்னைப் பார்...தம்பி! என்னைப் பார்!...எங்களைப் பிரிந்து நீ எங்குச் செல்வாய்?

இள : விரிந்துகிடக்கும் இவ்வுலகிலே எண்சாண் உடம்புகொண்ட எனக்குமட்டும் இடமின்றிப் போய்விடுமா?...... எண்ணற்ற மக்களிடையே இனிமேல் நானும் ஒருவன்.

செங் : (இருகையையும் பற்றியவாறு) தம்பி! உன்னை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். வெந்த புண்ணிலே வேலைச் சொருகாதே; உன்மீது உயிரையே வைத்திருக்கும் எங்களை விட்டுப் பிரிந்து போகாதே!... வேண்டுமானால் நானே இவ்வாழ்வைத் துறந்து விடுகின்றேன்.

இள : என்ன பேச்சுப் பேசுகின்றாய்? அரசியல் நெறிகளை நன்கு உணர்ந்த நீயே, தந்தையார்க்குப்பின் நாடாளவேண்டும். இதுவே எனது விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

செங் : (கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) எல்லாம் அறிந்த உனக்கு இனி நான், எதைச் சொல்லப் போகின்றேன்?

இள : (பெருமிதத்துடன்) கணியரே! நீர் சொன்னது பொய்த்து விட்டதே எனக் கலங்குகின்றீரா?

கணி : (தடுமாற்றத்துடன்) இல்லை, இளவரசே! எனது கணியம் ஒருகாலும பொய்க்காது. தாங்கள் அரச வாழ்வைத்தானே துறந்தீர்கள்! ஒருவேளை தங்கள் பிள்ளைகளுக்கு இவ்வரசுரிமை வந்தெய்தல் கூடும்.

இள : கணியரே! உமது அறியாமைக்காக நான் வருந்துகின்றேன். குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்னும் கதை எனது நினைவுக்கு வருகின்றது...முன்னர் நான் என்றீர்; இப்போது என் மக்கள் என்கின்றீர்! (எள்ளல் சிரிப்பு)... உமக்கோ அல்லது வேறு எவருக்குமோ அந்த ஐயம் ஏற்பட வேண்டாம். சற்று முன் இந்த அரசுரிமையைத் துறந்தேன்...

(சிறிது அமைதி) பெரியோர்களே! அரச வாழ்வோடு ஐம்புலப் பற்றுக்களையும் இக்கண முதல் துறக்கின்றேன என்பதை என் தாய்மீது உறுதிகூறி. அறிவிக்கின்றேன்...(வெற்றிச் சிரிப்பு) இனி நான் ...துறவி! (மீண்டும் சிரிப்பு) ஆம். இளங்கோ ஒரு துறவி! (நடுக்கத்துடன் நிற்கும் கணியனைப் பார்த்து) கணியரே! அரச வாழ்வைத் துறந்தேன் என்றேன்; நீர் அமைதி பெறவில்லை; இப்போது இல்லறத்தையே துறக்கின்றேன்; உமக்கு மன நிறைவுதானே?

நற் : (துயர்மிக) ஐயகோ! உன்னை இந்த முடிவுக்கா அந்தக் கணியன் ஆளாக்கவேண்டும்? கொடுமை! தாங்கமுடியாத கொடுமை! நெஞ்சம் வெடித்துவிடும்போல் இருக்கின்றதே! உள்ளத்தை கல்லாக்கிக்கொண்டு நீ உரைத்த சொல் என்னைக் கொல்லாமல் கொல்கின்றதே! கணியனைப் பார்த்து) ஏன் இங்கு வந்தாய்? என் மைந்தனின் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வைப்பறித்துவிட்ட காலனே! என் மகன் உனக்குச் செய்த தீமை யாது? பால் வடியும் முகத்தைக்கண்டும் இச்சூதான எண்ணம் உனக்கு எப்படித் தோன்றியது?... ஐயகோ! வளம் பொங்கவேண்டிய என் மகன் வாழ்வு இன்று வறண்டுவிட்டதே!... இளங்கோ! இளங்கோ! (பேச முடியாமல் அரசிக்குத் தொண்டை தழுதழுக்கின்றது. அதைக் கண்ட செங்குட்டுவன் வெகுண்டெழுகின்றான்.)

செங் : (சினம் மிக) அமைதியாக இருந்த வாழ்விலே அவலத்தைப் புகுத்திய இவ்வற்பனை ஆயுள் முழுவதும் சிறையிலடையுங்கள். தகாத சொற்கள் கூறித் தம்பியின் வாழ்வையே கொன்ற இக் கொடியவனை இருட்டறையில் தள்ளி இடருறச் செய்யுங்கள். தென்றல் தவழ்ந்த இடத்திலே புயலை உருவாக்கிவிட்ட இப் புல்லனைக் கொல்லாமல் கொல்லுங்கள்...அவையிலே சொல்லத்தகாதவற்றைச் சொன்ன இவன் பகை நாட்டானின் ஒற்றனாக இருப்பினும் இருப்பான். அவனை இழுத்துச் செல்லுங்கள். (காவலர் இருவர் கணியனை நெருங்கிப் பற்றுகின்றனர்.)

இள : நிறுத்துங்கள். (காவலர் கணியனை விடுகின்றனர்) அண்ணா! நீயா இப்படிப் பதறுகின்றாய்? பொறுமையாக இரு!.. காவலர்களே! இக்கணியரை ஒரு துன்பமும் நெருங்காதவாறு நமது நாட்டு எல்லைக்கு அப்பால் விட்டு வாருங்கள்... அவரது கலைத் தன்மை முழுமைபெறாவிட்டாலும் கலையை நாம் போற்றி மதிப்பளிப்போம்... அமைச்சரே! அவருக்கு வேண்டிய பொன்னும் பொருளும் கொடுத்தனுப்புங்கள்.

கணி : (கண்ணீர் பொங்க இளங்கோவின் காலில் விழுந்து) இளவரசே! அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருள்க. நான் கற்றவரையில் எனது மனதிற்பட்டதை அப்படியே சொன்னேன்...பொன்னிலே புரளவேண்டிய உங்களைப் புழுதியிலே

தவழும்படி செய்துவிட்டேன். இன்று முதல் எனது கணியம் பிழைத்தது. இக்கண முதல் அதனை விட்டொழிக்கின்றேன்... அறியாது செய்த இப்பெருங் குற்றத்தை மன்மாரப் பொறுத் தருளுங்கள்.

இள : கணியரே! எழுந்திரும். (கணியன் எழுந்திருக்கின்ருன்.) இனியாவது நீர் கொண்ட கலையில் குறைநேராவண்ணம் பார்த்துக்கொள்ளும். கலையில் பயிற்சி இருந்தால்தான் நன்கு படியும். அப்போதுதான் கலையைப் போற்றுவார் நிறைவர்; கலை பரவும்; வாழும்; வளரும!...சென்றுவாரும்.

கணி : (இரு கையையும் கூப்பி) நன்றியை நவிலச் சொற்களே இல்லை, இளவரசே!

இள : இளவரசா? தவறு கணியரே, துறவி—ம்...நான் துறவி! (வணங்கியபடி கணியன் செல்கின்ருன். ஆடை அணிகளை இளங்கோ களைகின்ருர். அனைவரும் கண்ணீர் வடிக் கின்றனர்.)

நற் : இளங்கோ;...இளங்கோ!

செங் : தம்பி! அன்னையின் கண்ணீரைக் கண்டுமா உனது மனம் இளகவில்லை?

இள : அண்ணு!, செய்த முடிவை மாற்றிக்கொள்ளுதல் இயலாது... அன்னையாருக்கு ஆறுதல் கூறு

நெடு : இளங்கோ! நீ எங்கும் போகவேண்டாம்: அரண்மனையின் ஒரு புறத்திலே நீ அமைதியாக இருக்கக்கூடாதா?

இள : தந்தையே! தாங்களுமா மனம் கலங்குகின்றீர்கள்?

நெடு : அனைவரும் வாய்விட்டு அரற்றினர். எமது மனம் பிறரறி யாவண்ணம் அழுகின்றது.

செங் : தம்பி! நீ எங்களுடன் அரண்மனையிலேயே தங்கிவிடு.

இள : வஞ்சி மூதூரின் குணவாயிற்கோட்டம்தான் எனக்கேற்ற இடம். துறவிக்கு வானம் கூரை; இந்த வையம் வீடு; வாழும் உயிர்க்குலம் அனைத்தும் சுற்றம்...(அன்னை, தந்தை, தமையன் காலைத்தொட்டு வணங்கல்). அனைவர்க்கும் எனது வணக்கம். வருகின்றேன்.

நற் : இளங்கோ! அன்பு மைந்தா!... இளங்கோ!... (மயங்கி விழுதல்) (அனைவரும் கண்ணீர் வடிக்க, அமைதிப்பொலி வுடன் இளங்கோ அரசவையைவிட்டு நீங்குகின்ருர்)

காட்சி முடிவு

காட்சி—3.

இடம் : புத்த மடம்.

உறுப்பினர் : புத்தத் துறவிகள்.

நிலைமை : புத்தரின் சிலை முன்னர், சில புத்தத் துறவிகள் அமர்ந்து புத்தனின் புகழ்பாடுகின்றனர்,

எல்லோரும் : புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தன்மம் சரணம் கச்சாமி

துறவி : புதுநெறி வகுத்த புத்தபிரானின் புகழ் பாடுவோம்! அவர்து அருள் வழியினை நாடுவோம்! பெறற்கரிய பேரின்பத்தைக் கூடுவோம். (அப்போது இளங்கோ துறவுக்கோலம் பூண்டு நுழைகின்றார்.)

இள : அருட்டிரு அடிகளே ! வணக்கம்.

துறவி : (தனிமொழி) ஆள் யாரென அறியமுடியவில்லை ; புதியவர் போல் தோன்றுகின்றார். ஆனால் பழக்கமான குரலாக இருக்கிறது...(இளங்கோவை நோக்கி) இப்புத்தமடம் எல்லோருக்கும் பொது. நீ யாராயிருப்பினும் உன்னை அன்போடு வருக என இருகைய்யும் நீட்டி அழைக்கின்றேன். வா, மகனே ! வா ! (இளங்கோ சிரிக்கின்றார்)...உனது சிரிப்பிற்குக் காரணம் ?

இள : என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு ?

துறவி : இல்லை மகனே !

இள : நன்றாக உற்றுப்பாருங்கள்.

துறவி : (அருகு வந்து பார்த்து வியப்புடன்) இளவரசர் இளங்கோவா? என் கண்களை நம்பமுடியவில்லையே ! நாடாள வேண்டிய இளவரசர் ஓடேந்தும் துறவியரில் ஒருவரா ? (சிறிது அமைதி, கூட்டத்தினர் இளங்கோவை வியப்புடன் பார்க்கின்றனர்)

இள : (அமைதியாக) அடிகளே ! வியப்பு வேண்டாம். இளங்கோ தான் தங்கள் முன் இளந்துறவியாகக் காட்சியளிக்கின்றேன். சற்றுமுன் வரை நான் சேரநாட்டின் இளவரசன் ; இப்போது உலகப்பற்றுக்களை உதறியெறிந்த ஒரு துறவி.

துறவி ; அன்று சித்தார்த்தர் அரசப் பற்றுக்களைத் துறந்து புத்தரானார், புதுநெறி கண்டார் ; உலகை வாழ்வித்தார். இன்று நீ அரசைத் துறந்துள்ளாய் ! எதை வாழ்விக்கப் போகின்றாய் ?

இள : (உறுதியான குரலில்) தமிழ்த்தாய் என்னை வாழ்விக்கின்றாள் ; அழியாத ஒரு காப்பியப் படைப்பின்மூலம் நான் செந்தமிழ்த் தாய்க்கு அணிசெய்வேன்.

துறவி : இளங்கோ ! உன்னால் இவ்வுலகிற்கு நிலைத்த புகழுண்டு என்பதை என்றோ நான் அறிந்துகொண்டேன். இன்று அது மலர்கின்றது. விரைவிலே பூத்து அதன் மணம் எங்கும் பரவட்டும் என வாழ்த்துகின்றேன்.

இள : தங்கள் வாழ்த்திற்கு எனது வணக்கம்.

துறவி : புத்தர் பிரானின் அருள் நின்பால் பொலியட்டும்.

எல்லோரும் : புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தன்மம் சரணம் கச்சாமி.

துறவி : அடிகளே! தங்களது அன்பு மொழிக்கு எனது நன்றி. எனது செயல் புதுமை; உள்ளம் புதுமை; எல்லாச் சமயங்களும் எனக்குப் பொது. நான் குணவாயிற் கோட்டத்தை எனதிருப்பிடமாகத் தேர்ந்துள்ளேன்.

துறவி : வாழ்க நின் உள்ளம்! வளர்க நின் தொண்டு! (இளங்கோவைத் தவிர அனைவரும் சென்று விடுகின்றனர்; இளங்கோ சிந்தனை தோய்ந்த முகத்துடன் குறுக்கும் நெடுக்குமாக நடைபோடுகின்றார். புத்தர் சிலையைக் கூர்ந்து பார்க்கின்றார். அவரது முகத்தில் புன்முறுவல் படர்கின்றது)

இளங் : (தனிமொழி) புத்த பிரானே! நீ பொன் துறந்தாய்; மண் துறந்தாய்; மனை துறந்தாய்; வாழ்வின் துணை துறந்தாய்; மழலைமொழி பேசும் மகனைத் துறந்தாய்; ஆனால் மக்கள் நலம் நாடும் மனத்தை மட்டும் துறக்கவில்லை.

நானும் பொன் துறந்தேன், மண் துறந்தேன்; மனை துறந்தேன்; முன்னறி தெய்வங்கள் அன்னை தந்தையர், தமையன் இவர்தம் ஆருயிர் உறவைத் துறக்க முயல்கின்றேன். என்றாலும் துறக்க இயலாதது ஒன்று உண்டு. அதுதான் என் தாய் தமிழ்!

அன்னையே! என்றன் தமிழ் அன்னையே! இதுவரை அரச வாழ்வென்னும் தங்கக்கூட்டிலே அடைபட்டுக்கிடந்த பைங்கிளியாக நான் வாழ்ந்தேன். பூட்டிய கூட்டை உடைத்துக் கொண்டு வெளியேறிவிட்டேன். இனி உனது புகழைப் பாடுவதே எனது பணியாகும். இனி எனது மூச்சும், பேச்சும் நீயே!

காணும் கவினுறு காட்சி எல்லாம் நீயே. பூணும் என் புலமை எல்லாம் பொன் கொழிக்கும் நின்னெழிலன்றி வேறில்லை: வானும் பெருமை குன்ற, வரை கடல் உன் எல்லையில் நின்று திரை இசையால் நாடோறும் உனது புகழ்பாட, தேனூர் சுவையமுதை அள்ளி வழங்கும் என் தேவே! உன்றன் பொன்மடியில் தவழவரும் சின்னஞ்சிறு பையலாகிய என்னை ஏற்றுக்கொள்; சொன்னலமும், பொருள்நலமும்; பன்னலமும் பொலியப்பாடும் தமிழ்த் துறவி என்னும் பெறற்கரிய பேற்றினை அருளிச் செய்... (வெற்றிச் சிரிப்பு.)

நான் துறவி!...... உலகப் பற்றுக்களை உதறிய துறவி!!

முத்தமிழ்க்கலையைத் துறக்காத துறவி!!!

— காட்சி முடிவு —

தமிழனே தலைமகன்

(சாலை இளந்திரையன்)

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே உலகில் முன்தோன்றி மூத்த மனிதப் பிள்ளை தமிழனே'' என்று தமிழ் இலக்கியம் இசைக்கிறது. உலகம்மையின் அந்த முதற் குழந்தை தமிழனே என்று வெளிப்படையாகக் கூறத்தயங்கும் வரலாற்று ஆராய்ச்சியாளரும், ''தமிழன் வாழ்ந்திருந்த பகுதிதான் உலக முதல் மனிதனின் பிறப்பிடமாக இருக்கவேண்டும்'' என்று இயம்புகிறார்கள்.

இன்று தனக்கென்று ஒரு நாடு இல்லாமல், ஒரு சாண் வயிற்றுக்காக ஏழுசாண் உடம்பையும் வளைத்துக் குனிந்து உலகெங்கும் வேலை தேடித் திரியும் தமிழனைக் காண்பவர்கள், ''இவனா அந்த உலக முதல்வனின் வழி மகன்!'' என்று வியப்படைகிறார்கள். அதனால், பழைய தமிழனின் மாண்புகளையும் வாய்விட்டுக் கூறத் தயங்குகின்றார்கள். எனவே நமது ஏடு முழங்கும் ஏற்றத்தையும் நமது கல்வெட்டுகள் சுட்டிக்காட்டும் தீரத்தையும் ''கற்பனையாக இருக்குமோ?'' என்று சந்தேகக்கண் கொண்டு நோக்குகிறார்கள், உன்னத இமயமலைபோல் ஓங்கியதோளும், புயல் போல் விரைவும், பொங்கும் காவிரிபோல் ஒன்று திரட்சியும் கொண்டு நின்றவன் நமது மூதாதை. நாமோ, சூம்பிய தோளினர்; துவண்ட நோக்கினர்; ஒருவர் வாழ்வை ஒருவர் பொறுத நெல்லிக்காய் மூட்டைகள், நம்மைக் காண்பவர்கள், நமது முன்னோரைப்பற்றித் தப்புக்கணக்குப் போடும் வகையிலேயே நாம் வாழ்ந்து வருகிறோம்.

''குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓர்ஊர் நண்ணினும் நண்ணுவர்''

என்பது காலத்தின் நியதி. ஆறு இடும் மேடும் மடுவும் போலக், காலவெள்ளம் எந்த இனத்தின் வாழ்விலும் மேடு பள்ளங்களை ஆக்கிக்கொண்டே செல்லுகிறது. இவைகளை எல்லாம் அறிந்திருந்தும், இன்று நாம் தாழ்ந்து கிடப்பதை வைத்துக்கொண்டு, நமது முன்னோரின் பெருமையையும் குறைத்து மதிப்பிடுகிறது உலகம். அதற்குக் காரணம், தமிழன் என்னும் மானித மனிதனின் மாண்புப்பார்வை இன்றைய உலகுக்குத் தெரியவில்லை. செங்கோலும் வெண்குடையும்தான் செல்வம் என்பது உலகப் பாமரக்கணக்கு, வாழ்ந்து வளம்பெருக்கி உலகப் பார்வையில் செழித்துக் கிடப்பதே செல்வம் என்று கருதுகிறது உலகம். ஆனால் மானிதத் தமிழன். 'வாழ்ச்சியைப் போல வீழ்ச்சியும் செல்வமே' என்று கருதினான். நல்லவனாக வாழ்ந்திருப்பது மட்டுமல்ல, பொது நன்மைக்காக அழிவை ஏற்பதும் பெருமையே என்பது தமிழ் உள்ளம்.

"ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து"

என்பது வள்ளுவம். உலகம் சமநலச் சமுதாயமாக, உரிமையுள்ள கட்டங்களின் தொகுப்பாக வாழ்வதற்காக எல்லாரும் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்க வேண்டும்; அவ்வாறு ஏற்கின்ற பொறுப்பினால் நமக்கு அழிவு ஏற்பட்டால், அதனைக் கட்டாயம் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். அதாவது, எல்லாரும் இணங்கி வாழத் தக்கதான உலகத்தை ஆக்குவதே உயர் மனிதனின் பொறுப்பு, அதுவே முத்து முதிர்ந்து தெளிந்த மனிதனின் கடமை. சிலபோது இந்தக் கடமையை நிறைவேற்றுவதால் தனக்கே துன்பமும் அழிவும் ஏற்படலாம். அவ்வாறு ஏற்படும் அழிவை ஏற்றுக்கொள்வது பெருமை; அதை ஏற்றுக் கொள்ளாமல், பொது உலகநலனைச் சிதைத்துத் தனக்கு இன்பம் தேடிக் கொள்வது சிறுமை. இதுவே மூத்தோர் கொள்கை; இதுவே முதிர்ந்த அறிவுத் தெளிவின் பயன்.

இந்த நெறியைப் பின்பற்றி, 'பிறரின் வாழ்வு எந்த நிலையிலும் பாதிக்கப்படுதல் ஆகாது' என்ற உயர்போக்கில் செயல்பட்டதனால் வீழ்ச்சியடைந்தது தமிழ் இனம். பிறரின் நலனைப் பாதுகாப்பதற்காகத் தன் நலனைத் தியாகம் செய்தவன் என்பதனாலேயே தமிழன் உலகம்மையின் முதல்மகன் என்ற பெருமைக்கு உரியவனாகிறான். பூமியில் முந்திப் பிறந்தது தமிழனின் பெருமை அல்ல; தன் செயல்களின் மூலம், தன்னை மூத்தபண்பினன் என்று நிலைநாட்டிக் கொண்டதே அவனது பெருமை.

யாருக்காகத் தமிழன் தியாகம் செய்தான்? அவன் தியாகத்தால் உயர்ந்தவர்கள் யார்?

வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் சிந்தனையாளர்களும் இது வரை பாராத பக்கம் இது. ஆகையால் தமிழனின் இத் தியாகப் பக்கம் ஒட்டடை மண்டி இருளடைந்து கிடக்கிறது. அதனை உணர்ந்துகொள்ள வேண்டுமானால் சற்றே ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

பழங்காலத் தமிழ் வரலாற்று ஏடுகளாக விளங்கும் சங்க இலக்கியங்களையும் அவற்றைத் தொடர்ந்து வந்த இலக்கியங்களையும் பார்த்தால், தமிழர்கள் பலமுறை இமயம் வரையிலே வெற்றிகொண்ட செய்தி கிடைக்கிறது. இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனையும், இமயத்தில் புலிக்கொடி பொறித்த கரிகால் பெருவளத்தானையும், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனையும், கங்கைக் கரையிலே தமிழாற்றலை நிலைநாட்டி இமயத்தில் கல்லெடுத்து அதனைத்தோற்ற மன்னரின் தலையில் ஏற்றிய சேரன் செங்குட்டுவனையும் இலக்கியம் தமக்குச் சொல்லோவியமாக்கிக் காட்டுகிறது (வரலாற்று ஆசிரியர்கள் என்று பெயர் பெற்றிருப்பவர்கள், நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் சண்டை போட்டதைப்பற்றிய பாட்டை உண்மை நிகழ்ச்சி

என்று ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; தமிழ் மன்னர்களின் இமயவெற்றியையும் ஈழ, கடார வெற்றிகளையும் மட்டும் "கற்பனையாக இருக்குமோ?" என்று ஐயுறுகிறார்கள். கிரேக்க நாட்டிலிருந்து ஒரு வீரர் படை இந்தியா வரையிலும் வர முடிந்தது கற்பனை இல்லையாம், தமிழகப் படை இமயம்வரை சென்றது கற்பனையாம். என்னே வரலாற்றாசிரியர்களின் "கற்பனை"!)

தமிழர்கள் பலமுறை இந்திய நாடு முழுமையும் வென்றார்கள். கீழ்க்கடலிலும் மேற்கடலிலும் உள்ள பல தீவுகளையும் வென்றார்கள். ஆனால் அவ்விடங்களிலெல்லாம் தமிழர்கள் தங்கள் ஆட்சியை நிறுவவில்லை. தங்கள் மொழி, கலை, நாகரிகங்களை அந்த நாடுகளிலே கொண்டு போய்த் தமிழர்கள் புகுத்தவில்லை. போர் வெற்றிக்குப் படை யெடுத்தார்கள்; அதைப் பெற்றார்கள். அத்துடன் மற்ற மக்களை, அவரவர் மொழி, கலை, நாகரிகங்களோடு வாழுமாறு விட்டு விட்டார்கள். காரணம், ஒரு மனிதக் கூட்டத்தின் மொழியும் கலைகளும் அக்கூட்டத்தின் உயிர் போன்றவை என்பதைத் தமிழர்கள் அறிந்திருந்தார்கள். அறிந்திருந்ததனால், அந்த உயிரைப் பறிக்கின்ற கொலைச் செயலை அவர்கள் மேற்கொள்ளவில்லை. அரசியல் வீரமும் வெற்றியும் வேறு; மக்கள் பண்பும் நாகரிகமும் வேறு. அரசியல் தோல்வி ஓர் இனமக்களின் பண்பாட்டைப் பறிப்பதாகாது. அவர்களின் மொழியையும் வாழ்க்கை முறைகளையும் பாதிப்பதாகாது என்று எண்ணினான் தமிழன். அப்படி அழித்துப் பறித்து ஒன்று கூட்டுவதன் மூலம் நற்பயன் எதுவும் விளையாது. அதனால் குழப்பங்களே மிகும் என்பது தமிழன் அறிந்த உண்மை. எல்லா மக்களுக்கும் அவர்களின் பண்பாட்டோடு வாழ்வதற்கு உரிமை உண்டு என்ற உயர் ஒப்புரவு அறத்தைக் கடைப்பிடித்தான் தமிழன்.

இப்பேரறத்தை எப்படியும் கடைப்பிடித்தே தீருவது என்ற உறுதியோடு தமிழன் செயற்பட்டதாலும், இளைய பிறர்கள் அந்தப் பண்பைப் பேணாததாலும் தமிழ் இனம் வீழ்ச்சியடைய நேர்ந்தது. பிறரின் சுதந்திரத்தை நசுக்கிப் பெருமை பெறுவதை விட, பிறரின் சுதந்திரத்தை மதித்து அதனால் தனக்கு அழிவு வந்தால் அதனை ஏற்றுக் கொள்வதே மனித நாகரிகம்.

தமிழரல்லாதவர்களின் ஆட்சி தமிழகத்தில் நடந்த காலங்களில் எவ்வளவு தீவிரமாக அவர்கள் தங்கள் தங்கள் மொழிகளையும் கலைகளையும் தமிழகத்திலே பரப்பினார்கள். எவ்வளவு மூர்க்கமாகத் தமிழையும் அதன் கலைகளையும் முன்னேற விடாதபடித் தடுத்தார்கள் என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும். மனிதப் பண்புக்கு ஒவ்வாத கொடுந்தண்டனைகளை வீரர்களுக்கு விதித்து, மக்களின் உள்ளங்களையே அச்சத்தால் அதிரடித்த பிறநாட்டினர்களை நமது தமிழகத்தின் பிற்கால வரலாற்றிலே பார்க்கவேண்டும். அந்தக் கொடுமைகளையும், அதிர்ச்சிகளையும் சேர்த்துப் பார்த்தால்தான், வெற்றி கொண்ட நாட்டில் தன் ஆட்சியைக் கூட நாட்டாத பழந்தமிழனின் பண்பாடு விளங்கும். அதை எடுத்து விளக்கினால்தான்,

தமிழ்க்கு வந்த கேடு ஒப்புரவு மாண்பினால் வந்த கேடு. அது நமக்கு இகழ்ச்சி அல்ல என்று இக்காலத் தமிழர்கள் உணர்வார்கள்.

தமிழன் வடஇந்திய மண்ணை வென்றபோது அப்பகுதி மக்களின் பழக்க வழக்கங்களிலோ கலைகளிலோ அவன் தலையிடவில்லை, அவர்களின் மூதாதையர்களான கண்ணனையும் இந்திரனையும், அவர்களின் வீரர்களான கருணனையும் அருச்சுனனையும் அவர்கள் வாழ்த்திப் போற்றுவதைத் தமிழன் தடுக்கவில்லை. அந்தப் பழைய வர்களைச் சுற்றியே பின்னப்பட்ட பல கலைகளும் தழைப்பதற்குத் தமிழனின் வெற்றி தடையாக இருந்ததில்லை. தமிழக மாவீரர்களின் வரலாற்றை அங்கெல்லாம் புகுத்தி, ''எங்கள் வீரர்களையே நீங்கள் போற்ற வேண்டும்.'' என்று தமிழர்கள் விதிக்கவில்லை.

இது தமிழன் வாழ்வுற்றிருந்தபோது இருந்த நிலை. அதே தமிழன் தாழ்வுற்று நின்றபோது ஏற்பட்ட நிலையை எண்ணிப் பாருங்கள். தமிழன் போர் முகத்தில் தோற்றான் என்பதற்காக, அவன் மண்ணிலே வேற்று நாகரிக வெந்நீரைப் பாய்ச்சினார்கள் வெற்றி பெற்றவர்கள். தமிழனின் வாழ்வு அடியோடு ஊடறுத்து ஊடுருவப்பட்டது. தமிழ் நெஞ்சில் படிந்திருந்த கண்ணகிதேவியைப் பறித்தெறிந்து விட்டு, அந்த இடத்திலே துரோபதையை ஊன்றினார்கள்; கண்ணகி கோயிலும், 'ஐவருக்கும் தேவி அழியாத பத்தினி' யின் கோயிலாக உருக்கொண்டது. தமிழ்வள்ளல் பாரியும் தமிழ்க் கவிக்குத் தலைகொடுக்க முன் வந்த குமணனும் வாழ்ந்த நெஞ்சத்திலே கருணன் குடியேற்றப்பட்டான. ''கொடைக்குக் கருணன்'' என்ற குரல் ஓங்கி முழக்கப்பட்டது. மாவீரன் வல்வில்ஓரி மறக்கடிக்கப்பட்டான்; அவன் இடத்தை எடுத்து அருச்சுனனுக்கு வழங்கினார்கள்.

தமிழகத்தின் கற்களிலும் கலைகளிலும் தமிழ் வரலாற்று வீரர்களையோ வித்தகர்களையோ காண முடியவில்லை. எதிலும் இறக்குமதித் திருமேனிகளே ஆட்சி செய்கிறார்கள். இவைகளெல்லாம் தமிழர்கள் விரும்பி ஏற்றவை என்றா நினைக்கிறீர்கள்? தன் அன்னை தந்தையரை மறந்துவிட்டு வேறொருவனின் முன்னோரை எவன் தான் விரும்பி வணங்க முன் வருவான்? எல்லாம் அச்சத்தாலும் ஆர்ப்பாட்டத்தாலும் ஏற்பட்டவை. களப்பிரர்களும், பல்லவர்களும், பிறரும் தங்கள் போர் வெற்றியால் தமிழர்களுக்குத் தந்த 'பரிசுகள்' இவை.

தமிழ் முன்னோனின் மாண்புற்ற வரலாற்று மனிதமணிகளின் பெயர்களாவது இன்று நமக்குக் கிடைக்கின்றன என்றால், அது யாரோ சில தியாகிகள் ஒளித்தும் மறைத்தும் பேணிவந்த பெருமை. மக்கள் மன்றத்திலும், காட்சி-கேள்விக் கலைகளிலும் வந்து விடாத படித் தடுக்கப்பட்ட இச்செய்திகளைப் பரண்மீதும் அடுக்களையிலும் வைத்துக் காத்தார்கள் சில மாணபாளர்கள். இலக்கியம் ஒரு சிலரின் கலையாக ஒடுங்கியதால் அந்நியர்களும் அதைத் தேடிச் சென்று தீயிடவில்லை; அது மக்களிடம் பரவியிருந்தால் அந்த வேலையையும் அவர்கள் செய்தே இருப்பார்கள்.

உலகில் பண்பு நிலைப்பதற்காகத் தன் வெற்றியையும் விட்டுக் கொடுத்தான் தமிழன். அன்று அவன் விரும்பியிருந்தால் அவன் வென்ற நாடுகளின் மொழிகளை எல்லாம் அழித்து அங்கெல்லாம் தமிழைப் பரப்பியிருக்க முடியும், காண முடியாத, கருத முடியாத கொடுமைகளால் அச்சமுதாயங்களையே அலைத்துக் குலைத்து ஒழித்திருக்க முடியும். ஆனால், பண்பிலே பற்றுக்கொண்டிருந்த தமிழன் அப்படிச் செய்யவில்லை. காரணம், அவன்தான் அக் காலத்தில் மனிதப் பண்பை உணர்ந்திருந்த ஒரே மானித மனிதன்; பிறரெல்லாம் பண்பு நெறி பயிலாத இளம்பிஞ்சுகள்.

மனித உயர் பண்பை விளக்கும் வள்ளுவன், "தனக்கு இணையாகாத எளியவர்க்கும் விட்டுக்கொடுத்து அவர்களுக்கு வாழ்வுரிமை வழங்குவதே சான்றாண்மை" என்கிறான்.

"சால்புக்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்"

ஒரு முனையில் தோற்றான் என்பதால் அவனது வாழ்வின் அனைத்து முனைகளையும் மழுக்கி அவனை மொட்டையடித்து விடுவது பண்பாகாது. மற்றவனைத் தனக்கு இணையாக வளரவிட்டு, அவனைவிட வளர்ந்து காட்டுவதே பண்புடைமை. அதுதான் முதிர்பண்பின் வெற்றி.

பழந்தமிழின வாழ்வின் உருவகமாக, எல்லாருடைய வீடுகளிலும் கிடைக்கும் ஓர் அனுபவத்தை அழகாக விவரிக்கிறான் வள்ளுவன்

"அமரகத்து வன்கண்ணர் போல, தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை."

போர்க்களத்தில் வீறுகொண்டு முன்செல்கின்ற வீரனே எதிரிப் படையின் முழு வேகத்தையும் தாங்கியாக வேண்டும்; இவன் படையின் மற்ற வீரர்கள் இவனுக்குப் பின்னேதான் நிற்பார்கள். அவனது அழிவே (பலசமயம்) அவர்களின் பாதுகாப்பு. ஒரு குடும்பத்திலும், குடும்பப் பொதுப் பொறுப்பை யாராவது ஒருவன் ஏற்றுக்கொண்டால், மற்றவர்கள் எல்லாரும், அதை அவனே சுமக்கட்டும் என்று விட்டுவிட்டுத் தங்கள் சௌகரியங்களையே கவனிப்பார்கள். உலகமென்னும் குடும்பத்தின் உயர் பண்பை நிலைநாட்டுவது என்ற பொறுப்பைத் தன் தோளில் ஏற்றான் தமிழன்; பிறரெல்லாம், அதை அவனே சுமந்து அழியுமாறு விட்டு விட்டுத் தங்கள் தங்கள் சுயநலத்திலேயே கண்ணுங் கருத்துமாக வாழத் தொடங்கி விட்டார்கள். ஆகவே, இன்று உலகில் கொஞ்சநஞ்சம் பண்பேனும் உள்ளது என்றால், தமிழன் தன் அழிவின் மூலம் கட்டிக் காத்து உலகுக்கு வழங்கிய சிறிய செல்வம் அது. எனவே, ஐயமில்லை, உலகன்னையின் உயர் பண்புக்காக வாழ்ந்த தமிழனே அவளின் தலைமகன்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

"வேள் எவ்வி" (நாடகம்)

ச. பாலசுந்தரம்.

காட்சி :— 15.

இடம் :- எவ்வியின் அரசவை.

மாந்தர் :- எவ்வி, அமைச்சர், வேங்கை வீரன், பாண்டிய நாட்டுத் தூதன், வீரர்கள்.

நிகழ்ச்சி :- எவ்வி கோபத்தோடு காணப்படுகிறான். அமைச்சர் முதலியோர் அவனைச் சூழ்ந்து நிற்கின்றனர்.

எவ்வி :- தப்பிவிட்டான் மகிழ்நன்! நச்சுமரத்தை வேர்களையாது விட்டு விட்டீர்.

அமை :- பாண்டி நாட்டிலிருந்து நமது ஒற்றன் வந்து விட்டான்.

எவ்வி :- செய்தி ?

அமை :- பாண்டியன் படை நீடூர் நோக்கிப் புறப்பட்டு விட்டதாம்.

எவ்வி :- என்ன ? பாண்டியனுக்கும் நமக்கும் என்ன பகை ?

வே-வீ :- மகிழ்நனின் சூழ்ச்சி அரசே. மகிழ்நனின் சூழ்ச்சி.

எவ்வி :- என்ன ?

வே-வீ : -பாண்டியன் பெயரைச் சொல்லிக் கிளர்ச்சி செய்த கூட்டத்தை அடக்கினேமல்லவா அதைத் திரித்துப் பாண்டியன் ஒற்றர்கள் வைத்த தீயிலே மகிழ்நன் நெய் ஊற்றியிருக்கிறான்.

எவ்வி :- இந்த மடையனின் பேச்சிலே மயங்கி, மாவீரன் என்று பேசப்படும் பாண்டியன் அறிவிப்பின்றிப் படையெடுத்துள்ளான். இதுதான் வேந்தர்கள் நெறியோ ?

[அப்பொழுது பாண்டி நாட்டுத் தூதன் வந்து கொண்டே]

தூதன் :- நெறி தவறும் சிறுமை நெடுஞ்செழியன் ஆட்சியில் இல்லை.

எவ்வி :- அழையா விருந்தாய் நுழைந்த நீ யார் ?

தூதன் :- மன்னர் முடி படியும் பொன்னடியால் சேர சோழனின் சின்னம் பணித்த செம்மல், ஒரு குடைக்கீழ் உலகாளும் வேம்பார் தெரியலன். தமிழ் வளர் மதுரையில் கலைவளம் புரக்கும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தூதன் யான்.

எவ்வி :- ஈண்டு போந்ததன் கருத்து ?

தூதன் :- பாண்டிய வேந்தன் பாதம் பணியாது ஈண்டு நின் ஆட்சியில் எதிர்ப்புளது அறிந்தோம். ஆண்டிட நினைத்தால் வேண்டுதும் பணிவு.

எவ்வி :- இரப்போர்க் களிப்பதே எவ்வியின் பண்பு.

தூதன் :- மறப்போர் நிகழ்ந்தால் மடிவது திண்ணம்.

எவ்வி :- இறப்பதும் பிறப்பதும் உலகத்தியற்கை. அறத்தகை வீரன் அஞ்சுவதில்லை—சிறப்புடை எமது செந்தமிழ் மறவர்க்கு விருப்புடன் பாண்டியன் விருந்தளிக்கிறான் ....

[வெகுளிச் சிரிப்பு]

தூத :- நீடூர் தலைவ ! கேடு வரும் முன்னர் நாடுவது அறிவு.

எவ்வி :- அறிவுறை போயினான் பழிமிகு செழியன்.

தூத :- நிறைகெடப் பேசினால் குறையும் உம் ஆயுள்.

வே-வீ :- குருதிப் புனலிலே குளிப்பவர் யாங்கள் ...... [சிரிக்கிறான்]

தூத :- வரிப்புலி முன்னர் சிரிப்பொலி வேண்டாம்.

எவ் :- கருநாகப்புற்றிலே கை நுழைக்கிறான் பாண்டியன்.

தூது :- அந்தி வானமாக உன் செந்தமிழ்நாடு குருதியைச் சிந்த வேண்டாமென்பதினால்

எவ் :- புந்தி உரைக்க வந்த புலவரே! வந்த வேலையை வகையுடன் செய்து போ. எந்த நாளிலும் எவ்வி பணியான்.

தூத :- மிழலைக் கூற்றம் அழலிலே தீயும்.

எவ் :- கழலைக் கட்டினோமே தவிர யாங்கள் காப்பணிய வில்லை.

தூத :- வாழ வழி யுரைக்க வந்தேன்.

எவ் :- கோழைகளிடம் சென்று கூறு.

தூத :- எனக்கு விடை ?

எவ் :- எங்கள் படை !

[தூதன் போகிறான் ....எவ்வி தன் வீரர்களிடம்]

புழுக்களென நினைத்துப் பொங்கு தமிழ் மறவரிடம் சங் கொலித்து வந்துள்ளான் பாண்டியன் ....

வேங்கை வீரரே! எங்கெங்கும் பறை முழக்கம் செய்யுங்கள். நம் மறவர் படை திரளட்டும். செழியன் பண்ட அழியட்டும்.

அமை :- அரசே ! பாண்டியன் படை மிகப் பெரிது. நம் வலியும் மாற்றார் வலியும் நோக்கிடும்போது உடன்பாடு செய்வதே மேலெனத் தோன்றுகிறது.

எவ்வி :- அமைச்சே இசை கேட்குமே தவிர என் காது வசை கேட்காது. வெற்றியா குறிக்கோள் ? கற்றறி அமைச்சே ! மானம் ! மானம் போனபின் வாழ்வது வாழ்வா ? அடிமை வாழ்விலும் கெடுவது நன்று. வேள் குலத்தவர் பிறர் தாள் பணிவதில்லை. கப்பம் கட்ட ஒப்பாது என் உள்ளம்.

அமை :- போருக்கு அஞ்சேன், ஊறுக்கும் அஞ்சேன்.

எவ்வி :- யாருக்கும் அஞ்சவேண்டாம். அழிப்போம் பகையை இன்றேல் இழப்போம் உயிரை.

அமை — வே-வீ :- வாழ்க எவ்வி !

காட்சி :— 16.

இடம் :- நர்ந்தமலைக் குகை.

மாந்தர் :- மகிழ்நன், வேட்டுவ வீரன், அருள்மொழி பாண்டி நாட்டுப் படைத்தலைவன்.

நிகழ்ச்சி :- மகிழ்நன் தனக்குள் ஏதோ சிந்தித்த வண்ணம் பேசிக் கொண்டிருக்கின்றான். வேட்டுவ வீரன் பக்கத்தில் நிற்கிறான்.

மகிழ் :- மகிழ்நனைப் பகைத்தான் மதியற்ற எவ்வி. புலவர் பாடும் புகழுடையோன். நாளை பாணர் பாட, வானம் புகுவான். [சிரிக்கிறான்]

வே-வீ :- தலைவரே! பாண்டியர் படைகள் வந்து விட்டன. நம் மலையடி வாரத்தில் பாடி வீடு அமைக்கின்றனர்.

மகிழ் :- (சிரித்து) நாடியது முடிந்தது. சிறு படையால் செருக்கி நம்மை நெருங்கிய எவ்வி நாளை நரிக்கு விருந்தாகப் போகிறான்.

[அப்பொழுது அருள் மொழி வந்து கொண்டே.........]

அருள் :- அப்பா! இவ்வளவு பெரிய படை எதற்கு ?

மகிழ் :- வேள் எவ்வியின் படைகளைத் தூள் தூளாக்க. என்னைச் சிறை செய்தான் எவ்வி. என் வீரர்களைச் சிதற அடித்தான். நாட்டைப் பாழாக்கினான். அதற்கு மாற்றுச் செய்கிறான் மகிழ்நன் இப்போது.

அருள் :- அப்பா! நீங்கள் வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக எத்தனை ஆயிரம் உயிர்கள் மடிய இருக்கின்றன. சிறிது சிந்தித்துப் பாருங்கள். இதனால் யாருக்கு நன்மை ?

மகிழ் :- நன்மையாவது தீமையாவது, நாளை இந்த எவ்வியையும் நீடூரையும் அழித்து அந்தக்குருதி வெள்ளத்திலே நீந்தினால் தான் என் நெஞ்சம் குளிரும்.

அருள் :- குறுநில மன்னரும் பெருநில வேந்தரும் தங்கள் நெஞ்சம் களிக்கச் செய்யும் போர்த் திருவிழாவில் பலியிடப்படும் உயிர்கள் எத்தனை கோடி! அப்பா! போர் வேண்டாம்.

மகிழ் :- வீரர்கள் மடியாமல் வெற்றி கிட்டுமா அம்மா? துன்பத்தின் முடிவிலே இன்பம்.

அருள் :- வாளையும் வேலையும் வரப்பாக்கி, தோளையும் தலையையும் எருவாக்கி, கருவுற்ற மனைவியரின் கண்ணீரையும் காப்பற்ற பெண்டிரின் விழி நீரையும் தண்ணீராக்கி விளைப்பதுதான் வெற்றி என்றால் அந்த வெற்றியை விரும்புகிறீர்களா ?
அப்பா! அறிவற்ற குழந்தைகளின் அலறலும், துணையற்ற தாயரின் துன்பொலியுந்தான் வெற்றிக்குப் பண் என்றால் அந்த வெற்றி இன்சுவை வேண்டுகிறீர்களா ? அப்பா வேண்டுகிறீர்களா ?

மகிழ் :- (கலக்கத்துடன்) அம்மா ! நீ அருளுள்ளம் படைத்தவள். அதிலும் பெண், அம்மா, என்றேனும் மக்கள் மடிவது இயற்கை. அது ஒருசேர நிகழும் நிலைதான் போர். அவ்வளவுதான்.

அருள் :- அப்பா ! வெளிருக்கும் நமக்கும் பகையென்றால் அங்கே வேந்தனை அழைப்பது அறமாகுமா ? காட்டிக்கொடுப்பது நாட்டிற்கும் நம் நாகரிகத்திற்கும் பழியல்லவா ?

மகிழ் :- அம்மா ! போர் முறையில் எவ்வளவோ சூழ்ச்சிகள் இருக்கின்றன.

அருள் :- ஆம், சூழ்ச்சியும் துன்பமும் ஆட்சி செய்வதுதான் போர்.

[அப்பொழுது பாண்டி நாட்டுப்படைத் தலைவன் அங்கு வருகிறான்]

ப-தலை :- குழந்தை என்ன அறிவுரை தருகிறது ? இக்காலத்தும் பெண்களே இப்படித்தான். தங்கள் நிலைக்கும் அறிவுக்கும் மேம்பட்ட காரியங்களில் தலையை நுழைத்துக் கொண்டு துன்பப்படுவார்கள்.

மகிழ் :- (சிரித்துக்கொண்டே) ஆமாம.........

[அருள் மொழியிடம்.........]

அம்மா ! நீ போ.

[படைத்தலைவனிடம்.........]

தூது என்ன வாயிற்று ?

ப-தலை :- எவ்வி உடன்படவில்லை. போர்க்குரியன யாவும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. நாளை போர் !

அருள் :- (மகிழ்நனிடம்) அப்பா ! ஓர் வேண்டுகோள்.

மகிழ் :- என்னம்மா ?

அருள் :- மறுக்க மாட்டீர்களே ?

மகிழ் :- இல்லை.

அருள் :- நானும் தங்களுடன் போருக்கு வருவேன்.

மகிழ் :- என்ன ? நீயுமா ? போருக்கா ?

[கலக்கத்துடன் மதி திரிந்தவனாய் வெறி கொண்டு.........]
போர் ! போர் !! போர் !!!

(சிரிக்கிறான்)

போர் ! போர் !!

திருப்புக் காட்சி

காட்சி :— 17 (நிழற்காட்சி)

இடம் :- போர்க்களம்.

மாந்தர் :- போர் வீரர்கள்.

நிகழ்ச்சி :- இரு பக்கத்துப் படைகளும் மோதுகின்றன. இடையிடையே "எவ்வி வாழ்க! எவ்வி வெல்க", "மகிழ்நன் வாழ்க மீன்கொடி வாழ்க. பாண்டியன் வாழ்க' "என்றும்" ஒழிக" என்றும் போர்க்குரிய கூக்குரல்கள் எழும்புகின்றன.

" அம்மா " அருள்மொழி! ஆ!" என்றும், மகிழ்நன் மடிந்தான், "ஐயோ எவ்வி வீழ்ந்தான் " என்றும் குரல்கள் எழும்புகின்றன.

பாண்டியர் படை, "தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் வாழ்க வாழ்க "என்று வெற்றி முழக்கத்தோடு செல்லுகிறார்கள்.

திரை.

காட்சி :— 18.

[எவ்வியைப் பாராட்டிக் கையறுநிலையாகப் புலவர்களும், பாணர்களும் பாடுகிறார்கள்—மகிழ்நனும் எவ்வியும் வேங்கை வீரனும் அருள் மொழியும் ஒன்றாக மடிந்து கிடக்கும் காட்சியை சிலவீரர்கள் பேசிக்கொள்ளுதல்]

இடம் :. பள்ளிக்கூட வகுப்பறை,

மாந்தர் :- ஆசிரியர், மாணவர்கள்.

நிகழ்ச்சி :- காட்சி ஒன்றில் உள்ளபடி ஆசிரியர் எவ்வியின் வரலாற்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்.........

ஆசிரி :- ....எவ்வியை இழந்த பாணர்கள் தங்கள் இசைக் கருவிகளை முறித்துப் போட்டு விட்டு, எவ்வி மறைந்தான்; இசைக்கலை மடிந்தது என்று கதறி அழுதார்கள்.

மாண :- ஐயா! எவ்விக்கும் பசும்பூண் பொருந்திலர்க்கும் உண்டாகிய பகை பாண்டியனுக்கு அல்லவா வெற்றியைத் தந்தது.

ஆசிரி :- ஆம், அதுதான் உலகத்தியற்கை. இந்த எவ்வியின் வரலாறு கொண்டு நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை அக்கால மக்கள் வரலாறு, பண்பு, நாகரிகம் இவைகளேயன்றி, இசை, மொழி இவை பற்றிய செய்திகளுமாம். அவை பற்றிப் பின்னர் உரைப்பேன். இப்பொழுது சங்க வாழ்த்து நிகழும், எல்லோரும் கலந்து கொள்ளுங்கள்.

நலம் வாழ்க.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

குறள் மரபு.

(புலவர் தி. நா. அறிவு ஒளி)

தீயொழுக்கம் திடுமென ஒரே கணத்திலும் உண்டாகிவிடும் இயல்புடையது என்பதைக் காட்ட இரண்டாம் கருத்தில் முதலி லேயே தீயொழுக்கம் என்ற சொல்லை ஆண்டு துவக்கி விட்டார். இன்று தீயொழுக்கம் துன்பம் தரவில்லையே?' எனச்செம்மாந்து தீமையைத் துணிந்து செய்பவருக்கு இன்றில்லாவிடினும் என்றே னும்–திண்ணமாக அஃது தீமையைத்தந்தே தீரும் என வரையறை செய்து அறிவுறுத்தினர்.

தொடக்கத்தில் தீயொழுக்கம் துன்பம் பயக்கா விட்டாலும் இறுதியில்–முதுமையில்–தீயொழுக்கம் துன்பம் அளித்தே பழி வாங்கும் என்பதைத்திட்டவட்டமாகக் கூறினர். இவ்வாறு சொல்ல மைப்பினின்றும் பொருள் நுட்பங்களை உணர்த்தும் குறள் மரபு வியக்கத்தக்க புது இலக்கிய மரபு.

திருக்குறளில் 9,310 சீர்களுள் உலக அடிப்படை உண்மை களைத் தெள்ளத் தெளிய கூறிய வள்ளுவரின் அறிவுள்ளத்தின் ஆழம் அளப்பரிது. நெஞ்சப்பாங்கைச் செப்பனிடும் ஒழுக்கநூல் அறத்தமிழ்நூல். நன்மை, தீமை என இரண்டு தனித்தனி உண்டோ? என ஐயுறும் அறிஞர் பலர் உளர். இந்த எண்ணத்தில் சேக்சுபியரும் சிக்கித்தவித்துள்ளார்.

"There is nothing either good or chad but thinking it so." எனவும் கூறிவிட்டார். இந்தத் தடுமாற்றத்தை வள்ளுவ ரிடம் காணமுடியாது. வள்ளுவர் நன்மைவேறு, தீமைவேறு என்று தனித்தனி பிரித்துணர்த்துகிறர். இந்தத் தெளிவறிஞரின் தீர்ப்பைத் திருக்குறளில் பரக்கக் காணலாம்.

"சென்ற விடத்தால் செலவிடாது தீது ஒரீஇ நன்றின் பால் உய்ப்பது அறிவு (422) என்ற குறளில் தீமையினின்றும் நீக்கி நன்மையின் பால் உய்ப்பதே-செலுத்துவதே-உண்மையறிவு என அழுத்தமாக முழங்கிவிட்டார்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை, தீயினும் அஞ்சப்படும்" என்ற விடத்தில் தீமையே தீயதரும் என்று திட்டவட்டமாக அறை கிறர். நல்லதன் நலனும் தீயதின் தீமையும் தெளிந்து கூறும் திருக் குறள் மாண்பு திசையெங்கும் முழங்குதற்குரிய திருமரபு. தமிழர் நுண்மாண் நுழைபுலச் செல்வராகத் திருக்குறளைக் காலையும் மாலையும் ஓதி வருவது மிகமிக இன்றியமையாதது.

தூங்கும் முன்னும், விழித்த பின்னும் குறள் ஓதும் மரபு தமிழகத்தில் வீடுதோறும் விளங்க வேண்டும். திருக்குறள் ஓதாத நாள் தீயநாளே. திருக்குறள் ஓதும் நாள் பொன்னுளே" என்று எண்ணும் உள்ளங்களை எழுச்சி உள்ளங்கள் அந்த நிலைக்குக் குறளுணர்வு தமிழர் நெஞ்சத்தில் ஊறித்திட்பமுறவேண்டும். தமிழிளைஞர் தமிழறம் கற்று ஒழுக முற்பட்டால் தான் தமிழினமும் தமிழ்நாடும் சிறக்கும். உலகில் குறள் வாழ்வு நிலைபெற நம்நாடு குறள் வாழ்வு வாழ்ந்து வழிகாட்ட வேண்டும்.!